Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | தை-16 | 29-01-2005 | சனிக்கிழமை | ஓசை -346




## சர்வதேச சமூகம் முன் எமது பிரச்சினை செல்வதற்கு

# அரசாங்கம் போடும் தடைகளினால் சமாதான முயற்சிகளும் பாதிப்புறும்!

## அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம்

(தாளையடி)



**"எமது மக்களுடைய பிரச்சினையை சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்வதற்கு அரசாங்கம் தடை போடுதல் கூடாது. அது பேச்சுவார்த்தையையும் பாதிக்கும்; பரஸ்பர நம்பிக்கையையும் பாதிக்கும்; எதிர் காலத்தில் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளையும் பாதிக்கும்" என புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக தனியார் ஊடகம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில்,

சுனாமி அனர்த்தத்தை ஒரு சாட்டாக வைத்து அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் உருவாக்குவதற்கான முயற்சிகளை (12ஆம் பக்கம் பார்க்க)

## தலைவரின் அழைப்பை அடுத்து பானு, சொர்ணம் வன்னி வந்தனர்

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பானு அவர்களும், திருமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் அவர்களும் சிறிலங்கா விமானப்படை உலங்கு வானூர்தி மூலம் நேற்றுக் காலை கிளிநொச்சி வந்துசேர்ந்தனர்.

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் அழைப்பினைத் தொடர்ந்து நேற்றுக்காலை 9.15 மணிக்கு உலங்குவானூர்த்தி மூலம் கிளிநொச்சி வந்தடைந்த மேற்படி தளபதிகளை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், தளபதி கேணல் தீபன் ஆகியோர் உட்பட பலர் வரவேற்றனர். (சோ)

## இராணுவ, பொலிஸ் அராஜகங்களை கண்டித்து மன்னாரில் பேரணி

### பல்லாயிரக்கணக்கில் மக்கள் பங்கேற்பு

(மன்னார்)

இராணுவமும், பொலிசாரும் அண்மைக்காலமாக மேற்கொண்டு வரும் அராஜகங்களைக் கண்டித்தும் சுனாமி நிதியை அரசு ஆயுதக்கொள்வனவுக்குப் பயன்படுத்துதல், தமிழர் பிரதேசம்திட்டமிட்டு புறக்கணிக்கப்படுத்தல் என்பவற்றைக் கண்டித்தும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த கண்டனப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சி பூர்வமாகக் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் அடைக்கலநாதன் ,சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், ஆயரின் பிரதி நிதி அருட் பணி விக்டர் சோசை ஏனைய மதத்தலைவர்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர்களை இணைப்பதான குற்றச்சாட்டிற்குப் புலிகள் மறுப்பு!

விடுதலைப்புலிகள் சிறுவர்களை படையணியில் சேர்ப்பதாக வெளியான குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர்.

புலிகள் இது தொடர்பில் கருத்து வெளியிடும்போது இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகள் மீது தொடர்ச்சியாக இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதானது அந்த அமைப்பிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உறவு நிலையைப் பாதிக்கும் என்றும்,வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாகப் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு தமது அமைப்பின் ஊடாக உதவிகள் மேற்கொள்ளப்பட்டு (12ஆம் பக்கம் பார்க்க)



## பேரணியில் கலந்து கொள்ள வந்த மக்களை திருப்பி அனுப்பிய படையினர்

(மன்னார்)

மன்னாரில் நடைபெற்ற மாபெரும் கண்டனப் பேரணிக்கு அடம்பன் பிரதேசத்தில் இருந்து வருகை தந்த மக்களை உயிலங்குள சோதனைச் சாவடியில் வைத்து இராணுவம் திரும்பியனுப்பியுள்ளது.

அத்தோடு மன்னார் நகரில் இயங்கும் ஹரிசந்திரா தலைமையிலான ஈ.பி.டிபி.குழுவினரின் கண்டனப் பேரணியும், மன்னார் மக்களும் என்ற போலித்துண்டுப் பிரசுரத்தை மன்னார் மக்கள் மன்றம் என்ற பெயரில் வெளியிடப்பட்டிருந்தும் மக்கள் அதனை அலட்சியப்படுத்திப் பெருமளவில் பேரணியில் கலந்து தமது எழுச்சியை வெளிப்படுத்தினர். (18)

## வீரவணக்கம்

27.06.2004 அன்று சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை சமுத்திரன்

(இராசலிங்கம் - தங்கையா/ராஜேந்திரா. 6 ஆம் வாய்க்கால், பன்குளம், திருகோணமலை. த.மு:- 5ஆம் வாட் சம்பூர் மூதூர், (12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி தொடர்பான வதந்தியால் மக்கள் அல்லோல கல்லோலம்!

இலங்கையின் வடக்கு, கிழக்கு, தென்பகுதி கரையோரத்தை 'சுனாமி' பேரலைகள் மீண்டும் தாக்கலாம் எனப் பரவிய செய்தியால் நேற்று கரையோரப் பகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுக்காலை பகல் சுமார் 10 மணியளவில் வெளியாகிய இச்செய்தியைத் தொடர்ந்து பீதியடைந்த மக்கள் அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேறினர்.சுனாமி அனர்த்தம் காரணமாக வெளியேறி மீளக்குடியமர்ந்த மக்களே பீதி காரணமாக மீண்டும் வெளியேறினர்.

குறிப்பாக முல்லை நகரப்பகுதி (12ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தம் வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்தத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் இரத்த வங்கி அறிவித்துள்ளது. சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிகிச்சைகளுக்கு இரத்தத் தேவைப்பாடு அதிகம் (12ஆம் பக்கம் பார்க்க)

## உலங்குவானூர்தியிலிருந்து படையினர் வாண வேடிக்கை

### மக்களிடையே பெரும் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி வான் பரப்பில் உலங்குவானூர்தியில் வந்த சிறிலங்காப் படையினர் செய்த வாணவேடிக்கைகளால் மக்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.வடமராட்சியின் சக்கோட்டை கடற்பரப்புக்கு மேலாக நேற்று மாலை 3.30 மணியளவில் உலங்குவானூர்தி ஒன்றில் பறந்த படையினர் வான் (12ஆம் பக்கம் பார்க்க)

# சகல மக்களுக்கும் பொதுவான அரசாங்கம் தமிழரின் இருப்பையே அச்சுறுத்துகிறது

## -சனாதிபதி சந்திரிகாவுக்கு மன்னார் வெ.அ.ஒ.மகஜர்

இந்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் நிகழ்வுகளை அவதானிக்கையில் மிகுந்த மன உளைவுகளுடனும் கவலையுடனும் உங்களை நோக்கி எழுப்ப வேண்டிய கட்டாய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். நாட்டின் சகல மக்களினதும் நலன்களுக்கு பொதுவானதாகச் செயற்பட வேண்டிய அரசாங்கம் மாத்திரமல்ல. சிறுபான்மையினரை ஆதரித்து அனுசரிக்க வேண்டிய பெரும்பான்மை சமூகம் கூட இந்நாட்டில் தமிழ் மக்களின் இருப்பையே அச்சுறுத்தி ஆட்டங் காணச் செய்து கொண்டிருக்கின்றது என மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று சனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த மூன்று வருட கால அமைதி நிலை தமிழர்களுக்கு சிறிதளவு ஆறுதலைக் கொடுத்திருந்த போதிலும் அந்த அமைதி நிலை தங்களால் பலாத்காரமாகக் குழப்பப்பட்டு தமிழ மக்களை மீண்டுமொரு யுத்த பீதிக்குள் தள்ளிவிட்டிருக்கிறீர்கள்.

இந்த பயங்கரமான சூழ்நிலையில் தான் இயற்கையின் கொடூரங்கள் பல தென்கிழக்காசிய நாடுகளின் மீது விரிந்து அதனால் இந்நாடும் பாரிய இழப்புக்குள்ளானது. சிங்கள மக்களை அதிகமாகக் கொண்ட தென்மாகாணத்தில் இருந்து மூன்று கடற்கரை மாவட்டங்களும் தமிழ் மக்களை அதிகமாகக் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஐந்து கரையோர மாவட்டங்களும் பாரிய இழப்புக்களைச் சந்தித்தன. இயற்கையானது இவ்விழப்பில் தமிழர், சிங்களவர் என்றோ, இந்தியன், இலங்கையன் என்றோ எவ்வித வேறுபாட்டையும் காட்டாது தான் தாக்கிய இடங்களையெல்லாம் சமமாகவே அழித்திருந்தாலும் தாக்கப்பட்ட நிலப்பரப்பு, இழக்கப்பட்ட உயிரிழப்புக்கள் இடப்பெயர்வுகள்அழிக்கப்பட்ட உடைமைகளின் பெறுமதி என்பவற்றைப் பொறுத்தமட்டில் தமிழ்மக்களுக்கேற்பட்ட இழப்பில் இந்நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மிக அதிகமானதாகும். சிங்களவர்களுக்கு இது முதல் இழப்பு. ஆனால் தமிழர்களுக்கு இது கொதிக்கும் உலையில் இருந்து அடுப்பினுள் விழுந்தது போன்ற தொடர் துன்பம், ஏனெனில் நாங்கள் நீண்ட காலமாக உங்கள் இராணுவ ஆக்கிரமிப்பினால் சொல்லொண்ணாத் துன்பங்களையும், அழிவுகளையும் சந்தித்துள்ளோம். எனவே இயல்பாகவும், நியாய நீதியின்படியும் எங்கள் மீது காட்டவேண்டிய அனுதாப உணர்வலைகளும் பரிவும் ஏனையவர்களை விட மிக அதிகமானதாகவே இருக்க வேண்டும் ஆனால் நடப்பது என்ன?

வடகிழக்கை தரிசித்தவர்களும், பார்வையிட்டவர்களும் எமது பிள்ளைகளான புலி அமைப்பினர் செய்த மிக நேர்த்தியான நிவாரண வேலைகளை ஒரு முகமாகப் புகழ்ந்ததுடன் அவசர அத்தியாவசிய வேலைகளை மிக நல்ல முறையில் நிறைவேற்ற ஓர் நிர்வாக கட்டமைப்பின் அவசியத்தையும் எடுத்துக்கூறியுள்ளனர். எனவே ஓர் இடைக்கால அதிகார சபையின் தேவை முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தற்போது உணரப்பட்டுள்ளது.

மேலும் எமது தேசியத் தலைவர் தமது மாவீரர் தின உரையில் மிகவும் தெளிவாக தமிழ் மக்கள் இவ்வாறான ஓர் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்திருக்க முடியாதெனவும் அரசு பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ளாவிட்டால் வேறு பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதை விட எம்மக்களுக்கு வேறு மார்க்கம் கிடையாதென தெளிவுபடுத்தியுள்ளார். வேறுவார்த்தைகளில் கூறுவதானால் முன்னை நாள் அதிபர் ஜெயவர்த்தனா அவர்கள் நிராயுதபாணிகளான தமிழ் மக்களை நோக்கிப் “போரா? சமாதானமா”? என்று தமிழ் மக்கள் மீது போர்ப் பிரகடனம் செய்தது போல இன்று எம் தேசியத் தலைவர் முப்பலத்தோடும், வல்லமையோடும் இருக்கும் நாங்கள் வரப் போகும் எந்தவொரு சவாலுக்கும் தயாராகவே உள்ளோம் என்பதை இதன் மூலம் வெளிப்படுத்துகின்றோம்.

எனினும் நாட்டில் ஏற்பட்ட இயற்கையின் அழிவு யுத்த மேகத்தை தற்காலிகமாகக் கலைத்துள்ளது. இந்த சுனாமி பேரனர்த்தம் இல்லாதிருந்தால் யுத்தமும் ஆரம்பித்திருந்தால் நாட்டின் நிலை என்னவாகியிருக்கும்?

சமாதானத்துக்கும் இயல்பு நிலைக்கும் ஏங்கும் சாதாரண பொதுமக்களாகிய நாம் சண்டை ஒன்று ஏற்படுமானால் அதனால் ஏற்படும் அனர்த்தங்களைக் கவனத்திலெடுத்து, மக்கள் ஆணையோடு தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தீர்வுத் திட்டத்தை முன்னிலைப்படுத்தி நடைமுறைப்படுத்துமாறு தமிழீழ மக்களாகிய நாம் வேண்டி நிற்கின்றோம். இத்தீர்வு முயற்சிகு இயற்கையின் சீற்றத்தைத் தொடர்ந்து அபரிதமாக வந்து குவிந்துகொண்டிருக்கும் சர்வதேச உதவிகளையும் ஆலோசனைகளையும் சாதகமாகப் பயன்படுத்துமாறு வேண்டி நிற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

# வடமராட்சி கிழக்கு பாடசாலைகளை 31ஆம் திகதி ஆரம்பிக்க முடிவு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பித்து மாணவர்களுக்கான கல்வியை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று உடுத்துறை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது. வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள அனைத்துப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று கூடி தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்துள்ளனர். காலை 10 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வரும் 31 ஆம் திகதி பாடசாலைகள் அனைத்தையும் ஆரம்பித்தல், மாணவர்களுக்கான சீருடைகள் தைக்கப்பட்டு இலவசமாக வழங்குவது மற்றும் பாடசாலைகளில் மக்கள் தங்கியிருக்கின்ற அதேவேளை மாணவர்களுக்கான கல்வியையும் வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தமிழீழ கடற்படை தளபதி மங்களேஸ்,கடற்படையின் வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன், நிதித்துறையைச் சேர்ந்த தாயகன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி, வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் குணவிழி ஆகியோரும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாகேந்திரம், கோட்டக்கல்வி அதிகாரி ரகுநாதன் ஆகியோர் உட்பட 150 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,தீ)

## –பாதிக்கப்பட்ட மாணவருக்கு–

# க.பொ.த (உ/த) வகுப்புக்கள் ஆரம்பிக்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கரைதுறைப்பற்றுக் கோட்டத்தில் க.பொ.த உயர்தரம் 2005 இல் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கான வகுப்புக்கள் யாவும் உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை முல்லை.மாவட்ட தமிழீழ கல்விக்கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே 2005 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கரைதுறைப்பற்று கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் அருகிலுள்ள பள்ளிகளின் முதல்வர்களுடன் தொடர்பு கொண்டு 31.01.2005 முதல் மேற்படி வகுப்புகளுக்கு தவறாது சமூகம் கொடுக்கும் வண்ணம் முல்லை.மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் சி.அறிவன்ப[illegible] கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

### கலந்துரையாடல்

தமிழீழ மாணவர் அமைப்பால் நடத்தப்படுகின்ற புதுக்குடியிருப்பு கணினி பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று மாலை 3.00 மணிக்கு நடைபெற உள்ளதாக நிர்வாகம் அறிவித்துள்ளது (08)

# தனிமையில் வசித்து வந்தவர் சடலமாகக் கண்டு பிடிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சாந்தபுரம் 21ஆம் ஒழுங்கைப் பகுதியில் தனிமையில் வசித்து வந்த 56 வயதுடைய அந்தோனிப்பிள்ளை ஜெயராசா என்பவர் நேற்றுச் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

கடந்த இரண்டு நாட்களாக வெளியில் மேற்படி நபரின் நடமாட்டம் இல்லாததை அறிந்த அப்பகுதி நபர் ஒருவர் நேற்று அவர் வீட்டைச் சென்று பார்த்த போது வீட்டினுள்ளே அவர் சடலமாகக் காணப்பட்டார். உடனே கிளிநொச்சி காவல் பணிமனையினருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து அப்பகுதிக்கு விரைந்து வந்த காவல் துறையினரால் உடல் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்பு அவரது சகோதரனிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி [illegible] சம்பந்தமான விசாரணைகளை தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (தீ)

# முழங்காவில் பகுதியில் கால்நடை வளர்ப்புப் பயிற்சி

(அலுவலகசெய்தியாளர்)

பூநகரி முழங்காவில் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பு, செயற்கை முறைச் சினைப்படுத்தல் சம்பந்தமான பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம் பூநகரி அபிவிருத்தி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிறுவன இணைப்பாளர் பொ.சிவசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி பயிற்சி வகுப்பில் பூநகரி பிரதேச கால்நடை வைத்தியர் செ.கௌரி திலகன், கால்நடை அபிவிருத்தி அலுவலர் க.சூரியகுமரன் ஆகியோர் கலந்துகொண்டு கால்நடை வளர்ப்பு மற்றும் செயற்கை முறைச் சினைப்படுத்தல் குறித்த கருத்துரைகளை வழங்கியதுடன் கால நடை சம்பந்தமான வீடியோப் படக்காட்சியும் காண்பிக்கப்பெற்றது. இப்பயிற்சி வகுப்பில் போரூட் வருமான அதிகரிப்புத் திட்டபயனாளிகளுடன் 30 இற்கும் மேற்பட்ட கால்நடை வளர்ப்பு பயனாளிகள் கலந்து பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது (சோ)

# புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க கிராமிய வங்கிக்கிளை திறப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் தலைமை பணிமனையில் அமைக்கப்பட்ட கிராமிய வங்கிக்கிளை திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு நெறியாளர் குழு உறுப்பினர் வி.சர்வானந்தராசா தலைமையில் ஆரம்பமானது. முதல் நிகழ்வாக மங்கல விளக்கினை நெறியாளர்குழு உறுப்பினர் திருமதி. சொ.பாரதியம்மா, பொது முகாமையாளர் இ.ரத்தினசிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அடுத்து தமிழீழத் தேசியக் கொடியினை நெறியாளர் குழு உறுப்பினர் செ.தனபாலசிங்கம் ஏற்றினார். கூட்டுறவுக் கொடியினை கூட்டுறவு திணைக் கள பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் அ.மரியாம்பிள்ளை ஏற்றிவைத்தார். இதனை அடுத்து கிராமிய வங்கியினை நாடாவை வெட்டி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவமயம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். தொடர்ந்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆசியுரை வழங்கினார். புதுக்குடியிருப்பு மேற்குக் கிளை செயலாளர் பா.சண்முகநாதன் சிறப்புரையாற்றினார். (08)

# திருநெறிக்கழகம் நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தினால் தரம் 12, தரம் 13 பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பெற்ற ஆறுமுகநாவலர் நினைவு தினக் கட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்ற பரிசுக்குரிய மாணவர்களின் பெயர்களும் பாடசாலையின் பெயர்களும் பின்வருமாறு;

தரம்:12

தி.நவராஜா-கிளி/கிளிநொச்சி ம.வி., வி.அனுஷா கிளி/திருவையாறு ம.வி, க.கார்த்திகா கிளி/கிளிநொச்சி ம.வி, இ.குகராஜினி கிளி/வட்டக்கச்சி ம.வி, க.கஜந்தினி கிளி/பூநகரி ம.வி., த.மேனகா கிளி/கண்டாவளை ம.வி.

தரம்:13

கு.தனுஷா கிளி/பூநகரி ம.வி, மு.ஜயந்தி கிளி/பூநகரி ம.வி, கே.தீபா.கிளி/பூநகரி ம.வி, தெ.நிஷாந்தினி கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி இவர்களுக்கான பரிசில்கள் விரைவில் வழங்கப்படுமென திருநெறிக்கழக தலைவர் தமிழ்ஜயா தெரிவித்துள்ளார். (சோ)


# நீங்காத நினைவில்...



துணைவர்
மு. யோகரட்ணம்
(அலுவலக உதவியாளர்)

இளைய புத்திரன்
மருட்சாயன்

திருமதி நிர்மலாதேவி
யோகரட்ணம்
(எழுதுநர்)

தகவல் :
மு. கோபாலரெத்தினம்,
பிரதேச செயலாளர் பிரிவு,
நாவிதன்வெளி கல்முனை.

(5666)

# தீவிரவாத அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் ஈராக்கியர்கள் வாக்களிக்க வேண்டும்

–அமெரிக்க சனாதிபதி புஷ் வேண்டுகை

(வோஷிங்டன்)

**"தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல், ஈராக்கியர்கள் தேர்தலில் பங்கு கொண்டு வாக்களிக்க வேண்டும்." என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஈராக்கிய மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.**

ஈராக்கில் வருகிற ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்றத் தேர்தல் நடக்கிறது. அந்த நாட்டில் பெரும்பான்மையாக வாழும் ஷியா முஸ்லிம்கள் தேர்தல் நடத்துவதை ஆதரிக்கிறார்கள். தேர்தலிலும் போட்டியிடுகிறார்கள். சன்னி முஸ்லிம்கள் சிறுபான்மையாக உள்ளனர். அவர்கள்



படையினர் விழிப்பு நிலையில்....

தேர்தலை எதிர்க்கிறார்கள். யாரும் வாக்களிக்கக் கூடாது என்று வாக்காளர்களை அச்சுறுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் வாக்களிக்கச் செல்ல வேண்டும் என்று ஈராக்கியர்களைப் புஷ் கேட்டுக் கொண்டு இருக்கிறார். அவர் 2ஆவது முறை சனாதிபதியாகப் பதவி ஏற்றுக் கொண்ட பிறகு நேற்று முன்தினம் முதல் முறையாக நிருபர்களுக்குப பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது;

"ஈராக் நாட்டு வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள் வருகிற 30ஆம் திகதி ஆகும். அன்று நடக்க இருக்கும் தேர்தலின்போது ஈராக்கியர்கள் தீவிரவாதிகளுக்கு அஞ்சாமல் வாக்களிக்க வேண்டும். பெரும் அளவில் ஈராக்கியர்கள் வாக்களிக்க முன் வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

சிலர் தீவிரவாதிகளுக்குப் பயந்து வாக்களிக்க வேண்டாம் என முடிவு எடுத்து இருக்கலாம். அவர்களையும் வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஈராக்கியர்கள் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ள ஆயத்தமாவதற்கு முன்பு அமெரிக்க இராணுவம் திரும்பப் பெறப்பட வேண்டும். என்பதற்கு மேல் வேறு எதையும் எதிரிகள் விரும்பவில்லை. அவர்கள் நோக்கம் சனநாயக ஆட்சி ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவதுதான். அந்த அளவுக்கு சுதந்திரம் அவர்களை அச்சுறுத்துகிறது. அடுத்த ஆண்டு வாக்கில், ஈராக்கியர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு அவர்களைத் தயார்படுத்தி விடுவோம்.

மக்களுக்கு விடுதலை கிடைக்கத் தொடர்ந்து பாடுபடுவோம். இதற்கான தேவைகளை தோழமை நாடுகளுக்கு எடுத்துக் கூறி அவர்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுவோம். அமெரிக்கா மாதிரியான சனநாயகத்தை அனைத்து நாடுகளும் பின்பற்றப் போவதில்லை. ஆனால் மனித உரிமைகளையும், மனித கண்ணியத்தையும் காப்பாற்றுவதுதான் சனநாயகம். அதை நாடுகள் பின்பற்ற வேண்டும்.

சுதந்திரத்துக்கு நிறைய எதிரிகள் இருக்கிறார்கள் இருந்த போதிலும் உலகம் முழுவதும் அது பரவி வருகிறது.

சுதந்திரத்தைப் பரப்புவதற்காக அமெரிக்க குடிமகன்கள் பலர் நிறைய தியாகம் செய்து இருக்கிறார்கள். அவர்களின் நனவைக் கௌரவிப்போம் என்று கூறினார்.

ஈராக்கில் இருந்து அமெரிக்க இராணுவம் எப்போது வெளியேறும் என்று நிருபர்கள் கேட்டபோது அதற்கு புஷ் நேரடியாக பதில் அளிக்கவில்லை. "அமெரிக்காவுக்கு உள்ள கடமையை விரைவில் நிறைவேற்றி முடிப்போம். பாதுகாப்பான நிலையான ஈராக்கை உருவாக்குவதுதான் அமெரிக்காவின் கடமை" என்று அவர் பதில் கூறினார்.



பலஸ்தீனப் பிரதமர் மூகமூத் அபாசின் பணிப்பின் பேரில் தெற்குக் காசாப் பிரதேச கான் யூனிஸ் அகதி மூகாமில் பலஸ்தீனப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

## இராணுவ உலங்கு வானூர்தி விபத்து வியட்நாமில் 16 படையினர் பலி!

(ஹனோய்)

வியட்நாம் நாட்டின் மத்திய பகுதியில் இராணுவ உலங்குவானூர்தி ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 2 தளபதிகள் உட்பட 16 வியட்நாம் இராணுவத்தினர் பலியானார்கள். வியட்நாம் நாட்டில் மத்திய பகுதியில் உள்ள காவ்போ என்ற தீவிலிருந்து இராணுவ உலங்குவானூர்தி புறப்பட்டு 5 ஆவது நிமிடத்தில் விழுந்து நொருங்கியது. இந்த உலங்குவானூர்தி ரஷ்ய நாட்டுத் தயாரிப்பாகும்.

ஹனோய் நகரில் இருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் விபத்துக்குள்ளான இந்த உலங்குவானூர்தி எப்படி விபத்துக்குள்ளானது என்ற விபரங்கள் தெரியவில்லை.

விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

## 4ஆவது சுற்று பேச்சுக்கு சீனா இணக்கம்


வடகொரியாவின் அணு வாயுத விவகாரத்திற்குத் தீர்வு காணும் நோக்கிலான ஆறு நாடுகள் கலந்து கொள்ளும் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு சீனா விருப்பம் தெரிவித்துள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம்மாதஆரம்பத்தில் இந்தோனேஷியாவில் நடைபெற்ற சுனாமி அனர்த்த நிவாரண மாநாட்டைத்தொடர்ந்து சீனா இதற்கு சம்மதம் தெரிவித்திருப்பதாக தெரியவருகிறது.

## தீவிரவாதிகள் நேற்றும் தாக்குதல் ஈராக்கில் ஆறு பேர் பலி!

(பாக்தாத்)

ஈராக் தீவிரவாதிகள் வாக்களிப்பு நிலையங்களையும் படையினரையும் இலக்கு வைத்து நேற்றைய தினமும் பல தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.



கார்க் குண்டு வெடிப்பின் பின்....

பாக்தாத்தின் தென்பகுதியில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். கிர்க்குக்கிலும், சமாவிலும் நடத்தப்பட்ட இரு வேறு தாக்குதல்களில் ஈராக் படை வீரர் ஒருவரும் மற்றும் பொலிசார் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

நாளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை குழப்பும் வகையில் தீவிரவாதிகளின் தாக்கு தல்கள் இடம்பெற்று வருகின்றமை தெரிந்ததே.

## தீவிரவாதிகளை கட்டுப் படுத்தும் ஆற்றல் ஈராக்கியப் படையினரிடம் இல்லை!

- அமெரிக்கப் படைத் தளபதி ஜெனரல் ஜோர்ஜ் கசே கருத்து

(பாக்தாத்)

தீவிரவாதிகளை கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை ஈராக்கியப் படைகளிடம் இல்லை. எங்களிடமிருந்து பொறுப்பை பெற்றுக் கொள்ள அவர்கள் தயங்குகின்றனர். இவ்வாறு ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி ஜோர்ஜ் கசே தெரிவித்தார்.

ஈராக்கில் தற்போது ஒரு இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க வீரர்களும், ஈராக் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தீவிரவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஜெனரல் ஜோர்ஜ் கசே கூறியதாவது;

ஈராக்கில் சதாம் ஹுசேன் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு, தீவிரவாதிகள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு ஈராக் படையினரிடம் திறமையில்லை . ஈராக் படையில் பயிற்சி பெற்ற ஆயுதம் தாங்கிய ஒரு இலட்சத்து 30 ஆயிரம் வீரர்கள் உள்ளனர். இருந்தாலும் தீவிரவாதிகளைத் தங்களால் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை அவர்களிடம் இல்லை. எங்களிடம் இருந்து அந்தப் பொறுப்பை பெற்றுக் கொள்ள அவர்கள் தயங்குகின்றனர்.

தீவிரவாத நடவடிக்கைகளில் இஸ்லாமிய அமைப்பைச் சேர்ந்தவர்கள் சதாமின், ஆதரவாளர்கள், சாதாரண கிரிமினல்கள், வெளிநாட்டு தீவிரவாதிகள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் வெளிநாட்டுத் தீவிரவாதிகளின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டாது.

ஈராக்கில் உள்ள 18 மாகாணங்களிலும் நான்கு மாகாணங்களில் தான் தற்போது தீவிரவாதிகளின் செயற்பாடு உள்ளது. மற்றப் பகுதிகளில் 80 சதவீத மக்கள் தீவிரவாதிகளின் பீதி இல்லாமல் உள்ளனர். கடந்த நவம்பர் மாதம்தான் தீவிரவாத செயல்கள் மிக அதிகமாக இருந்தன. தற்போது இது கட்டுப்படுத்தப் பட்டு விட்டது. இருந்தாலும் கார்க் குண்டு வெடிப்புகளும், தற்கொலை படையினரின் தாக்குதல்களும் தீவிரமாகவே உள்ளன. கடந்த மாதத்தில் தீவிரவாதிகள் 60 பேர் கைது செய்யப்பட்டனர். கடந்த ஆண்டில் கொல்லப்பட்ட மற்றும் பிடிபட்ட தீவிரவாதிகளின் எண்ணிக்கை 15 ஆயிரம் ஈராக்கில் தேர்தல் நடக்க இருக்கும வரும் 30ஆம் திகதி தீவிரவாதிகளின் தாக்குதல் தீவிரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் கூறினார்.

## பங்களாதேஷில் அரச எதிர்ப்புப் பேரணியில் குண்டு வீச்சு முன்னாள் அமைச்சர் உட்பட நால்வர் பலி; 150 பேர் காயம்!

–எதிர்க் கட்சித் தலைவி மயிரிழையில் உயிர் தப்பினார்

(டாக்கா)

பங்களாதேஷ் அரசிற்கெதிராக எதிர்க்கட்சி நடத்திய பேரணியில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் முன்னாள் அமைச்சர் ஒருவர் உட்பட நால்வர் உடல் சிதறிப் பலியாகினர் மேலும் 150 பேர் காயமடைந்தனர். பங்களாதேசத்தில் பிரதமர் கலிநா ஜியா தலைமையில் ஐக்கிய கட்சி ஆட்சி நடைபெற்றுவருகிறது. இந்த அரசின் நடவடிக்கைகளைக் கண் டித்து முன்னாள் பிரதமர் ஹசீனா தலை மையில் எதிர்க் கட்சியான அவாமிலீக் கட்சி பேரணி நடத்தியது. ஹபிகஞ்ச் மாவட் டத்தில் நடந்த இந்த ஊர்வலம் அங்குள்ள பள்ளி வளாகத்தில் முடிந்தது அப்போது கூட்டத்தினரை நோக்கி திடீர் என்று குண்டு வீசப்பட்டது.

இதில் முன்னாள் நிதி அமைச்சர் கிப்ரியா அவரது உறவினர் ஷாமஞ்சூர் உட்பட 4 பேர் உடல் சிதறிப் பலியானர்கள். 150 பேர் காயம் அடைந்தனர். பேரணியில் வந்த முன்னாள் பிரதமர் ஹசீனா உயிர் தப்பி விட்டார்

## அமெரிக்க வெளியுறவு அமைச்சராக கொண்டலிசா ரைஸ் பதவியேற்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புதிய வெளியுறவு அமைச்சராக கொண்டலிசாரைஸ் நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சராக இருந்த கொலின் பவல் சமீபத்தில் தனது பதவியை இராஜிநாமாச் செய்தார். இதையடுத்து கொண்டலிசாரைஸ் (50) அந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்திற்கு அமெரிக்க செனட் 85 இற்கு 13 என்ற வாக்கு விகிதத்தில் புதன்கிழமை ஒப்புதல் அளித்தது. இப்பதவிக்கு வந்துள்ள முதல் கறுப்பு இன பெண்மணி என்ற பெருமையையும் ரைஸ் பெற்றுள்ளார். இவர் நேற்று முன்தினம் முறைப்படி புதிய வெளியுறவு அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

கொண்டலிசாரைஸ் இதற்கு முன்னர் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவி வகித்தார். புஷ்ஷின் நம்பிக்கைக்குரிய உதவியாளராகவும், ஈராக் விஷயங்கள் மற்றும் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் கொள்கைகளை உருவாக்கும் நபராகவும் திகழ்ந்தார். தற்போது வெளியுறவு அமைச்சர் பொறுப்பை ஏற்றிருப்பதால் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றங்கள் இருக்கும் என்ற ஊகங்கள் எழுந்துள்ளன.

# சுனாமி பாதிப்புக் குறித்து த.ஆ.சங்க அறிக்கை

# ஏற்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்

## -எடியுகேஷன் இன்ரநஷனல் அமைப்பு கூட்டத்தில் முடிவு

(திருகோணமலை)

**வடக்கு கிழக்கில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையை ஏற்று நடவடிக்கை எடுப்பது என்று "எடியுகேஷன் இன்ரநஷனல்" என்ற கல்வி சம்பந்தமான சர்வதேச அமைப்பின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வடக்கு கிழக்கில் கல்விப்புலம் தவிர்ந்த ஏனைய துறைகளை சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்தில் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய நிலைமை இல்லாத படியால், அத்துறைகளில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சமர்ப்பிக்கும் தகவல்களையேற்று உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று "எடியுகேஷன் இன்ரநஷனல்" தலைவர்கள் உறுதியளித்ததாக பொதுச் செயலாளர் மகாசிவம் கூறினார்.

'சுனாமியினால் வடக்கு கிழக்கில் உயிரிழந்த ஆசிரியர்களுடைய குடும்பங்களுக்கு முதற் கட்டமாக "எடியுகேஷன் இன்ர நஷனல்" என்ற சர்வதேச அமைப்பு தலா 5000 ரூபா வழங்கப்போவதாக அறிவித்துள்ளது. "எடியுகேஷன்ல் இன்ரநஷனல்" அமைப்பு வடக்கு கிழக்கிற்கு வழங்கும் உதவிகள் யாவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஊடாகவே வழங்கப்படும் என்று சங்கத்தின் பொதுச செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

எடியுகேஷன் இன்ரநஷனல் தலைவர் பிரட்வான் லியூவனும் அந்த அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்திய பிரதம இணைப்பாளர் அலோசியஸ் மத்தியுஸும் கொழும்பு வந்த போது தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் தெற்குப் பகுதி சென்று சுனாமி அழிவுகளைப் பார்வையிட்டனர். சுனாமி புனரமைப்புக்குழுவின் தலைவர் வி.அஞ்சலாவிடம் ஐந்து லட்சம் ரூபா பணத்தை பிரதம இணைப்பாளர் அலோசியஸ் மத்தியூஸ் கையளித்தார். இப்பணத்திலிருந்து சுனாமியில் சிக்கி உயிரிழந்த ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அவர்களுடனான சந்திப்பின் போது பின் வரும் முடிவுகள் எடுக்கப்பட்டதாக பொதுச் செயலாளர் மகாசிவம் அறிவித்தார். எடியுகேஷன் இன்ரநஷனல் தலைவர் பிரட்வான் லியூவன் ஏப்ரல் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்து வடக்கு கிழக்கு பகுதிக்குச் சென்று சுனாமி அனர்த்தங்களை நேரிற் பார்வையிடுவார். ஆசிய, பசுபிக் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் அலோசியஸ் மத்தியூஸ் பெப்ரவரியில் வடக்கு கிழக்குப் பகுதிக்குச் செல்வார். (25)



வட்டக்கச்சியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆண்டு ஒன்று மாணவர்களின் புகுமுக விழா (படம் ரூபன்)



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகக் காணி அலுவலகத்தினரால் உதயநகர்கிழக்கு மேற்கில் நடாத்தப்படும் நடமாடும் சேவை. (படம்-சோதி)




கிளிநொச்சி மருத்துவசங்கத்தினரால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை தாதியர் விடுதிக்கென ஐம்பத்திரெண்டாயிரம் ரூபா பெறுமதியுடைய தொலைக் காட்சிப் பெட்டியும் அன்ரெனாவினையும் மாவட்ட வைத்தியசாலையில் வைத்து கிளிநொச்சி மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி வழங்கிவைப் பதனைப் படத்தில் காணலாம்.(படம் சோதி)

# சுனாமியால் உயிரிழந்தவர்கள் நினைவாக வவுனியாவில் நினைவுத்தூபி திறப்பு

## -ஒட்டுசுட்டான்,மாங்குளப் பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்வுகள்

(வவுனியா செய்தியாளர்)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்த உறவுகளின் நினைவாக வவுனியா பூந்தோட்டம் விளையாட்டு மைதானத்தில் நினைவுத் தூபி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய பரிபாலன சபையினரால் நிர்மாணிக்கப்பட்ட இந்நினைவுத்தூபி திறப்பு விழா கடந்த புதன் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது.

நரசிங்கர் ஆலய பரிபாலன சபை உபதலைவர் கோ.சிறிஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுத் தூபியை வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர் உட்பட பலர் கலந்து கொண்டு நினைவுத் தூபி முன்பாக சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தினர்.

சுனாமி பேரலை காரணமாக சாவடைந்தோரை நினைவு கூரும் நிகழ்வுகள் ஒட்டுசுட்டான், மாங்குளம் பிரதேசங்களிலும் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் 26.01.05 அன்று காலை 8.50 மணிக்கு ஒட்டுசுட்டான் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் வே.தயாபரன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய உபஅதிபர் செல்வி.இ. நிர்மலாதேவி, அரசியல் துறை போராளி அகக் கண்ணன் ஆகியோர் ஏற்ற, தேசிய கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் புரட்சி நிலவன் ஏற்றியதைத் தொடர்ந்து, நினைவுரைகளை கோட்டப் பொறுப்பாளர் ஈழவன், ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி சி. ஜெயபாலன் ஆகியோருடன் ஆசிரியர்கள் பலர் வழங்கினர். நினைவுக் கவிதைகளும் வாசிக்கப்பட்டன. மாங்குளம் பிரதேசத்தில் மாங்குளம் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பஞ்சலிங்கம் தலைமையில் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் பொதுச்சுடரினை மாங்குளம் மகாவித்தியாலய அதிபர் திருமதி செல்வராணி விஜயகுமார் ஏற்ற தேசியக் கொடியினை மாங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் அணியழகன் ஏற்றியதைத் தொடர்ந்து நினைவுரைகளை மாங்குளம் மகாவித்தியாலய அதிபர் மற்றும் அணியழகன் ஆகியோர்வழங்கினர். (05)

# தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியம் திருகோணமலையில் அங்குரார்ப்பணம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியம் அமைக்கப்பட்டது. தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்களின் சந்திப்பு ஒன்றின் போதே, ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

திருகோணமலை மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு இச்சந்திப்பை ஒழுங்கு செய்திருந்தது நியூசில்வர் ஸ்டார் ஹோட்டலில் நடந்த இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் பங்குபற்றி உரையாற்றினார். தனியார் கல்வி நிலையங்கள் கல்வியுடன் மாணவ சமுதாயம் ஒழுக்கம் நிறைந்ததாக மாற்றக் கூடிய தாக சேவைபுரிய வேண்டும் தனியார் கல்வி நிலையங்கள் இளைஞர் மத்தியில் ஒழுக்கச் சீர்கேடுகளை தோற்றுவிப்பனவாக அமையக் கூடாது. தமிழ் மக்களுடைய அழிவற்ற சொத்தாக விளங்குவது கல்வி மட்டுமே தான் அன்றைய அரசாங்கம் தரப்படுத்தல் முறை மூலம் தமிழ் மக்களின் கல்வித் தரத்தை சிதறடித்தது என்றும் எழிலன் தெரிவித்தார். திருகோணமலையில் புதிதாக தனியார்கல்வி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியத்தின் முன் அனுமதி முதலில் பெறப்பட வேண்டும். மாலை நேரங்களில் இரவு 7 மணிக்கு பின்னர் தனியார் கல்வி நிலையங்கள் நடத்தக் கூடாது என்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. (25)

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் புகுமுக மாணவர் விழா

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளில் நேற்று முன்தினம் புகுமுக மாணவர் விழா சிறப்பாக நடைபெற்றது.

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற நிகழ்வில் புகுமுகமாணவர்களையும் பெற்றார்களையும் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு தேசியக் கொடியினை மாவீரரின் பெற்றோரான ஆழ்வாப்பிள்ளையும் பாடசாலைக் கொடியினை பாடசாலை முதல்வர் இ. சுந்திரராஜா ஏற்ற மங்கல விளக்கினை பாடசாலை முதல்வர் இ.சந்திரராஜாவும், பிரதி அதிபர் திருமதி. பொன்னத்துரையும் ஏற்றி வைத்தனர்.

இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் தேசியக் கொடியினை பாடசாலை முதல்வர் சி.பாலகிருஷ்ணனும், பாடசாலைக் கொடியினை திருமதி. முத்துலிங்கமும் மங்கலவிளக்கினை ஆசிரியரான அகிலநாயகமும், நளாயினி பாடசாலையின் செயலாளர் இராசேந் திரமும் ஏற்றிவைத்தனர்.

இராமநாதபுரம்கிழக்குப் பாடசாலையிலும் இந் நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலைமாணவர்களின் கலை நிகழ்வுகளும்,புகுமுக மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இதேவேளை பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசத்தின் வலயக்கல்வித் திணைக்களத்திற்கு உட்பட்ட சகல பாடசாலைகளிலும் தரம் 01 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. (12)

# வயலுக்குள் மாடு சென்றதால் இருவருக்கிடையில் கைகலப்பு

(ஒட்டுசுட்டான்)

வயலுக்குள் மாடு சென்றது குறித்து வாக்குவாதப்பட்ட இருவருக்கிடையில் வாக்குவாதம் முற்றியநிலையில் ஒருவர் மற்றவரைத் தடியால் அடித்துப்படுகாயப்படுத்தியுள்ளார். இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது கடந்த புதன் கிழமை அன்று தனது வயலுக்குள் மாடு வந்து விட்டது என துரத்திய போது மாட்டுரிமையாளரும் உடனே அவ்விடத்திற்கு சென்ற வேளை இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு அடிதடியில் இறங்கியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இவர் உடனடியாக புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார். சோ. ஜீவனேஸ்வரன் (வயது28) 04 ஆம் கண்டம் கற்சிலைமடு என்பவரே காயமடைந்தவராவார். இவருடன் சண்டையில் ஈடுபட்டவரும் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் உள்ளார். (05)

# தடைவிதிப்பு

மன்னாரில்மண்அகழ்வு முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. மணல் தேவைப்படுவோர் ஆற்று மணலை எடுத்துப் பாவிக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட்டது. தற்சமயம் மண்அகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த இடங்களில் பாரியபள்ளத்தாக்குகள ஏற்பட்டுள்ளன. எனவே தடையை மீறி மண் எடுப்போர் மீது கடும் நடவடிககை எடுக்கப்படுமென மன்னார் பிரதேச செயலாளர் வலதீஸ்வரன் அறிவித்துள்ளார் (18)

# சுனாமி தேசிய அனர்த்தம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

சுனாமி தேசிய அனர்த்தம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் இரண்டாம் திகதி காலை 10.30 மணிக்கு வவ்னியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா அரச அதிபர் திரு.சி. சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர்,சிவசக்தி ஆனந்தன், விநோநோகராதலிங்கம், சதாசிவம் கனகரட்ணம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

# மக்கள் மீதான படையினரின் அச்சுறுத்தல்கள்
# தொடர்ந்தும் சகித்துக்கொள்ள முடியாதவை!

## -தென்மராட்சி பொதுமக்கள் ஒன்றியம் கண்டனம்

(தென்மராட்சி)

**தென்மராட்சிப்பிரதேசத்தில் சிறிலங்காப்படைகள் மற்றும் புலனாய்வுத் துறையினர் பொதுமக்கள் மீது கொலை அச்சுறுத்தல் விடுப்பதைத் தொடர்ந்தும் சகித்துக்கொள்ள முடியாது என தென்மராட்சி பொது மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

கடந்த சில மாதங்களாக தென்மராட்சிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் மீதான இராணுவ அழுத்தங்கள், கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள்,மிரட்டல் நடவடிக்கைகளில் ஆயுதம் தரித்த சிறிலங்காப்படையினரும், புலனாய்வுத்துறையினரும் ஈடுபட்டு வருவதைத் தொடர்ந்தும் சகித்துக்கொள்ள முடியாது என்று தென்மராட்சிப் பொதுமக்கள் ஒன்றியம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

மக்களை நசுக்கிநரபலி எடுத்த சிறிலங்காப்படைகளின் படுகொலைகளின் அத்தியாயங்கள் இன்றும் மக்கள் மனங்களில் இருந்து நீர்த்துப்போகவில்லை என்றும் கொடுமைகளையும், கொடிய சித்திரவதைகளையும் அனுபவித்துள்ள தமிழ் மக்கள் சிறிலங்காப் படைகள் மற்றும் புலனாய்வுத் துறையினரின் அச்சுறுத்தும் நடவடிக்கைகள் என்பவற்றையும் சகித்துக் கொள்ள மாட்டார்கள் என்றும், தென்மராட்சிப் பிரதேசத்தில் சிலரை படுகொலை புரிவோர் என புலனாய்வுத்துறையினர் கூறி வருவதைக் கண்டு பொதுமக்கள் அச்சம் அடையவில்லை என்றும் அப்படி ஏதேனும் நடவடிக்கைகள் இந்த மண்ணில் சிறிலங்காப் படைகளால் முன்னெடுக்கப்படும் எனில் இந்தப் பிரதேசத்தில் சிறிலங்காப்படைகளின் நடமாட்டமும் கேள்விக்குறியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களை கடலரிப்பிலிருந்து பாதுகாக்க வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை தொடக்கம் தொண்டமனாறு வரையிலான கடற்கரையோரப் பிரதேசங்களைக் கடலரிப்பிலிருந்து காப்பதற்கு உடன நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனத்தினர் யாழ். அரச அதிபர் கணேஸிடம்கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கடற்கரையோரங்களை கடலரிப்பிலிருந்து பாதுகாப்பதற்காக இடப்பட்டிருந்த முருகைக்கற்பாறை அணைகள் கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரலையால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன.

இந்நிலையில் இக்கடற்கரையோரங்களில் மீண்டும்பாறை அணைகளை இடாதுவிடின் இப்பிரதேசத்தின் நிலப்பரப்புக் கடலரிப்பினால் பாதிக்கப்படக் கூடிய அபாயநிலை காணப்படுவதைச் சுட்டிக்காட்டியே இக்கோரிக்கையை யாழ் கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனத்தினர் யாழ். அரச அதிபரை நேரடியாகச் சந்தித்து முன்வைத்துள்ளனர். (33)

# வடமராட்சி நலன்புரிநிலையங்களில் இலையான் தொல்லை அதிகரிப்பு!

(பருத்தித்துறை)

வடமராட்சியில் உள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் இலையான்கள் அதிகளவில் காணப்படுவதால் பல்வேறு வகையான நோய்கள்பரவும் ஆபத்து தென்படுகிறது.

ஒவ்வொரு நலன்புரி நிலையங்களையும் பார்வையிடும்போது இலையான்களின் தாக்கம் பெருமளவில் காணப்படுகிறது.

இலையான்கொல்லி மருந்தான "சோல்வறேற்"றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதினால், கட்டுப்பாடற்றளவில் இலையான் பெருகிவருகிறது. இதனால் நோய்கள் பரவும் ஆபத்தும் காணப்படுகிறது. (45)

# சுனாமியால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு உதவித்தொகை

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தால் யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட ஒவ்வொரு உயிர் இழப்பிற்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் உதவிக் கொடுப்பனவுகளை வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதில் ஏற்கனவே உயிரிழப்புக் கொடுப்பனவுகளாக 2 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு தலா 13 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் இதுவரையில் உயிரிழப்புக் கொடுப்பனவுகள் ஏதேனும் பெறாதவர்களுக்கு முழுத் தொகையாகிய 15 ஆயிரம் ரூபாவும் முழுமையாக வழங்கப்படுமென யாழ் அரசஅதிபர் கே. கணேஸ் அறிவித்துள்ளார். எனினும் இப் 15 ஆயிரம் ரூபா உதவிக் கொடுப்பனவு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை மீளக கட்டியெழுப்புவதற்குப் போதாதிருப்பதாகப் பலராலும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## பகிரங்க ஏலவிற்பனை

(வடமராட்சி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் பகிரங்க ஏலவிற்பனை இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் ஐம்பது உழவியந்திர லோட் விறகுகளும்,நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்ட ஐந்து ஆடுகளும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக பருத்தித்துறை நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (கா)

# மயக்க மருந்தைப் பாவித்து நள்ளிரவில் வீட்டில் கொள்ளை!

(தென்மராட்சி)

சரசாலை வடக்கில் கடந்த செவ்வாய் இரவு கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது இரவு வீட்டினுள் தூங்கிக்கொண்டு இருந்தவர்கள் மீது ஜன்னல் வழியாக மயக்க மருந்தை ஸ்பிரே செய்து தூங்கிக் கொண்டிருந்தவர்களை மயக்கி அதன்பின் வீடு புகுந்து கொள்ளையர்கள் வீட்டில் இருந்த ரூ 75 ஆயிரம் ரொக்கப் பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி மற்றும் சில நகைகளையும் கொள்ளையடித்து சென்றுள்ளதாக தெரியவருகிறது. சம்பவம் இடம் பெற்ற வீட்டில் இரண்டு அல்சேசியன் வகையைச் சேர்ந்த நாய்கள் இருந்தும் கொள்ளையர்கள் தமது கைவரிசையை வெகுஇலகுவாக காட்டியிருப்பது இப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (28)

# கரையோரப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் இராணுவத்தின் முயற்சிகள் கைவிடப்படவேண்டும்

## –தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

கடற்கரைகளை அண்மித்துக் குடியிருப்புகளை அமைக்க வேண்டாமென சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருப்பதைச் சாதகமாகப் பயன்படுத்தி யாழ். குடா நாட்டின் கரையோரப்பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா இராணுவம் ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈழவேந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட "சுனாமி" அனர்த்தங்களைப்போல எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய அனர்த்த அழிவுகளில் இருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாக கடற்கரையோரங்களில் இருந்து 100 மீற்றர் தூரத்துள் மக்கள் குடியிருப்புகளை அமைக்க வேண்டாம் என அரசு உத்தர விட் டுள்ளது.

இதற்கு அமைவாக பொது மக்கள் கடற்கரைகளுக்கு நெருக்கமாக விருக்கும் குடிமனைகளை விட்டு வெளியேறி குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் குடியேற முயற்சிக்கிறார்கள்.

ஆனால் இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கடலோரங்களில் நிலைகொண்டுள்ள படையினர் பொதுமக்களால் கைவிடப்பட்ட காணிகளைச் சுவீகரித்து உடைந்து போன வீடுகளது கட்டடப் பொருட்களைப் பயன்படுத்தி புதிய புதிய முகாம்களை நிறுவி வருகின்றனர்.

இவ்வாறு சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி படையினர் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் பொது மக்களின் உடமைகளை சுரண்டும் நடவடிக்கைகளையும் ஏற்க முடியாது. எனவே இது தடுத்து நிறுத்தப்படல் வேண்டும் என வலியுறுத்தியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் படையினரது அநாகரிகமான இவ் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ் .மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜா ஜெனரல் சுனில்தென்னக் கோனிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (33)

# பாதுகாப்பு வலயத்திலுள்ள தனது வீட்டை மீட்க நீதிமன்றம் செல்ல ஆசிரியர் ஒருவர் முடிவு!

## நீதி மறுப்பின் சாகும்வரை உண்ணாவிரதம்

(தென்மராட்சி)

உசன் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து தனது வீட்டை மீட்டெடுக்க சிறிலங்கா நிதிமன்றத்தை நாட இப்பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் முயற்சித்து வருவதாக தெரியவருகிறது.

சரஸ்வதி என்ற ஆசிரியரே தனது வீட்டை சிறிலங்காப் படைகளிடமிருந்து மீட்டுத்தரக் கோரி இறுதியாக நீதிமன்றத்தை நாடப் போவதாகவும் அதிலும் நீதி தனக்கு மறுக்கப்பட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதே பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் கடந்த மாதம் தனது வீட்டைப் படைத்தரப்பிடமிருந்து மீட்டுத்தரக்கோரி, போராடி வந்தபொழுது மனநிலை பாதிக்கப்பட்டு அதிர்ச்சியில் மரணம் அடைந்தமை தெரிந்ததே.

# கொலை முயற்சியில் ஈடுபட்ட நால்வருக்கு ஒரு வருட சிறை!

கரணவாய் அண்ணா சிலையடியைச் சேர்ந்த சண்முகம்-சுந்தரம், ராமச்சந்தின் சிவாஜனா, சுந்தரம் ராமச்சந்திரன், காந்திராமச்சந்திரன் ஆகியோரை இரத்தக்காயம் ஏற்படும் வகையில் கத்தியால் வெட்டியும் குத்தியும் , சைக்கிள் செயின்களால் தாக்கியது தொடர்பான வழக்கு கடந்த 26 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்டது. வழக்கை விசாரித்த பருத்தித்துறை மாவட்ட நீதவான் க .அரியநாயகம் மேற் குறிப்பிட்டவர்களைத் தாக்கிய குற்றத்திற்காக கரணவாய் தெற்கு அண்ணா சிலையடியைச் சேர்ந்த நால்வருக்கும் ஒருவருடகால சாதாரண சிறைத்தண்டனையும், நால்வரும் தலா மூவாயிரம் ரூபா அபராதமும் செலுத்த வேண்டுமெனவும், அபராதம் செலுத்தத் தவறின் மேலும் நான்குமாத தண்டனை வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கினார். (கா)

# பிரான்ஸ் செய்திச் சேவை உட்பட ஊடகப் பிரதிநிதிகளுக்கு மொரட்டுவ சுனாமி அகதி முகாம் செல்லத் தடை!

மொரட்டுவப் பிரதேசத்திலுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களுக்குள் பிரவேசிக்க ஊடகப் பிரதிநிதிகளுக்கு மொரட்டுவ பிரதேச செயலகம் தடை விதித்துள்ளது. இத்தடை சனவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதாக மொரட்டுவ எகொட உயன பிரதேச அகதி முகாம்களில் பணியாற்றும் இரா ணுவ உத்தியோகத்தர்கள் ஊடகப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள் ளனர்.

பிரான்ஸ் செய்திச் சேவை உட்பட "லக்பிம" மற்றும் உள்ளூர் ஊடகப் பிரதிநிதிகள் கடந்த 25 ஆம் திகதி எகொட உயன பிரதேசத்திலுள்ள சுனாமி அகதி முகாம் ஒன்றை அவதானிக்கச் சென்ற சந்தர்ப்பத்திலேயே அங்கி ருந்த இராணுவ உத்தியோகத் தர்கள் மேற்படி விசேட தடையுத்தரவு நடைமுறைப்படுத்தப் படுவதாகத் தெரிவித்து ஊடகப் பிரதிநிதிகள் உட்பிரவேசிக்க அனு மதி மறுத்தனர்.

பின்னர் "பிரான்ஸ் செய்திச் சேவை"பிரதிநிதியொருவர் மொரட்டுவ பிரதேச செயலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதுபற்றி வினவிய போது, மேற்படி சுனாமி அகதி முகாம்களுக்குள் பிரவேசிக்கப் பிரதேச செயலகத்திலிருந்து எழுத்து மூலமான பிரவேச அனுமதி பெறப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.மதப் பிரசாரங்களுக்காக சுனாமி அகதி முகாம்களுக்குள் வருபவர்களினால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதாலேயே மேற்படி பிரவேசத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மொரட்டுவப் பிரதேச செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

# ஞாயிற்றுத் தொகுதியில் — மேலும் பல கோள்கள்

அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் விண்வெளி ஆய்வு மையம் அண்மையில் நடத்திய ஆய்வின் பெறுபேறாக ஞாயிற்றுத் தொகுதிக்குரிய மேலும் பல கோள்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஞாயிற்றுத் தொகுதியில் (ஞாயிறை) சூரியனைச் சுற்றி பல கோள்கள் இருப்பது நாம் அறிந்த விடயமாகும். அந்த வகையில் புதன் கோள் சூரியனுக்கு அண்மையாகவும் நாம் வாழும் பூமி அடுத்ததாகவும் தொடர்ந்து வெள்ளி, வியாழன், சனி, யுரேனஸ், நெப்ரியூன், புளூட்டோ ஆகிய கோள்களும் அமைந்துள்ளன.

ஆயினும் புளூட்டோ கோளுக்கு அப்பாலும் கோள்கள் இருக்கின்றனவா என அறிய, ஐரோப்பிய, அமெரிக்க விஞ்ஞானிகள் பல முறை ஆய்வு நடத்தி வந்துள்ளனர். இந்த ஆய்வுகள் மூலம் புதிய கோள்கள் இருப்பது பற்றியோ இல்லாமை பற்றியோ எது வித முடிவும் கிடைக்கப் பெறவில்லை.

தற்போது அண்மையில் நடத்திய ஆய்வுகள் மூலம் புளூட்டோ வுக்கு அப்பாலும் கோள்கள் இருப்பது அவதானிக்கப் பட்டுள்ளன.

1781 ஆம் ஆண்டு விலியம் ஹர்ஷல் என்ற விஞ்ஞானி யுரேனஸ் கோளை கண்டு பிடித்தார். இது சூரியனிலிருந்து 2870 மில்லியன் கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. அக்கோள் சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலம் 84 வருடங்கள் ஆகும். இதற்கு 15 உப கோள்கள் உள்ள போதும் மிரண்டா எனும் கோளே கவர்ச்சி கரமானதாக உள்ளது.

அதனைப் போன்றே நெப்ரியூன் அமைந்துள்ளது "இதனைப் பற்றி ஆய்வு நடத்திய வொயேஜ் (Voyage) 11 விண்கலம் புதிய தகவல்களை வெளியிட்டுள்ளது. நெப்ரியூனின் பரிமாணம், விட்டம், காலம், அதன் வளிமண்டலம் தொடர்பான பல தகவல்களும் கிடைக்கப் பெற்றன. அத்துடன் நெப்ரியூனை சுற்றி மெல்லிய ஐந்து வளையங்களும் காணப்படுவதாக ஆய்வு தெரிவிக்கின்றது. அதன் வளிமண்டலத்துக்கு குறுக்காக மேகக் கூட்டங்கள் காணப்படுவதாகவும் அவை பரந்து காணப்படும் கோடுகள் போலவும் காணப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. மேலும் நெப்ரியூனின் வளிமண்டலம் தொடர்பாக பல்வேறு கருத்துக்களும் தோன்றியுள்ளன.

அதாவது வளிமண்டலத்தில் காணப்படும் மூலப் பொருள் ஞாயிற்றுத் தொகுதியிலேயே உற்பத்தியாகி அங்கு கடத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த ஆய்வுகளைப் போன்று 2003 ஆம் ஆண்டு ஆய்வுக்கலம் ஒன்றை அனுப்பிய மேற்படி டெக்சாஸ் விண்வெளி மையம் கடந்த நவம்பர் மாதம் செட்னா (Sedna) எனப்படும் புதிய கோள் ஒன்றை கண்டு பிடித்துள்ளது.

அது சூரியனுக்கு மிக அண்மையில் வரும்போது 7 மில்லியன் மைல் தூரமாகவும் தூரத்தில் பயணம் செய்யும் போது 90 மில்லியன் மைல்களாகவும் இருக்கும்.

செட்னாவின் விட்டம் 800–1100 மைல்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. அது சூரியனை சுற்றிவர எடுக்கும் காலம் 10 ஆயிரத்து ஐந்நூறு வருடங்களாகும். இதன் படி சூரியனுக்குமிக செய்மையில் உள்ள கோள் செட்னா வாகும் இது மிகவும் குளிர்ச்சி அடைந்த கோள் ஆகும். இதன் வெப்பம் 400 பரனைட் பாகையாகும். இது பனிக் கோளத்தால் மூடப்பட்டுள்ளது. இதன் விசேட அம்சமாவது புவியைப் போன்று ஈர்ப்பு சக்தி காணப்படுவதாகும்.

இதை விட "1x10N" எனப்படும் மேலும் ஒரு சிறு கோள் 2001 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் விட்டம் 500 மைல்களாகும். தூரம் 3.7 மில்லியன் மைல்களாகும். அத்துடன் 2002 ஆம் ஆண்டு "2002 u 25" என்ற கோளும் 2000 ஆம் ஆண்டு வருண என்ற கோளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மற்றும் "2002 aw 197,"2004 Dw" என்ற கோள்களும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.



ஜெர்மன் நாட்டில் உள்ள மொராக் கோ நகரில் சர்வதேச சர்க்கஸ் விழா நடைபெற்றது. இதில் ரஷ்யாவை சேர்ந்த பள்ளி மாணவர்கள் அணியும் பங் கெடுத்துக் கொண்டது. அப் போது அந்த மாணவர்கள் ஒருவர் மீது ஒருவர் ஏறி நின்று மனிதக் கோபுரம் அமைத்து அனை வருடைய பாராட் டையும் பெற்றனர்.

# உலகில் நால்வருக்கொருவர் உயர் ரத்த அழுத்த நோயால் பாதிப்பு

மனித குலத்தை ஏற்கனவே ஒரு பக்கம் எய்ட்ஸ் அச்சுறுத்தி வரும் நிலையில் இன்னொரு புறம் மிகப் பெரிய ஆபத்தாக வளர்ந்து கொண்டிருக்கிறது உயர் ரத்த அழுத்த நோய். தற்போது உலக அளவில் 4 பேருக்கு ஒருவர் என்று இருக்கும் இந்தப் பாதிப்பு அடுத்த 20 ஆண்டுகளில், அதாவது 2025 ஆம் ஆண்டில் 3 பேருக்கு ஒருவர் என்று மாறி விடும் என நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதய ரத்த நாளங்களில் நோய்கள் உண்டாகுவதற்கு காரண மான உயர் ரத்த அழுத்த பிரச்சினை, மாரடைப்பு மற்றும் பக்கவாதத்தை உண்டாக்கி உயிரைப் பறிக்கும் எமன் என்பது குறிப்பிடத்தக்கது.

2000 ஆம் ஆண்டு புள்ளி விபரங்களின் படி வளரும் நாடுகளில் 639 மில்லியன் பேரும், வளர்ந்த நாடுகளில் 333 மில்லியன் பேரும் இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. 2025 ஆண்டளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1.56 மில்லியனாக உயரும் அதாவது 60 சதவீதம் அதிகரிக்கும்.


உலகம் முழுவதும் இத்தகைய பாதிப்பு இருந்தாலும், குறிப்பாக ஆசிய நாடுகளில் கொலஸ்ட்ரால் உண்டாக்கும் கொழுப்பு உணவுகள், உடல் பயிற்சியின் மை, உணவுகளில் அளவுக்கு அதிகமாக உப்பு, புகையிலை பயன்படுத்தும் பழக்கம் ஆகியவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் உயர் ரத்த அழுத்தத்தால் பாதிக்கப் பட்டவர்கள் இந் நாடுகளில் தான் அதிகம் உள்ளனர்.

தொடர்ச்சியான உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு ஆகியவற்றின் மூலம் இப்பிரச்சினையை சமாளிக்க முடியும். அதற்கு விரிவான அளவில் விழிப்புணர்வு பிரசாரங்கள் செய்திட வேண்டும்.



மெக்சிக்கோ சிட்டியில் மிகப் பழமையான வீடுகளின் இடி பாடுகளை ஆய்வு செய்யும் பணியில் தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது மண்ணுக்குள் புதைந்து கிடந்த இந்த மனித எலும்புக் கூடு கண்டுபிடிக்கப்பட்டது. இது கிறிஸ்து பிறப்பதற்கும் 700 ஆண்டுகள் முந்திய மனிதனுடைய அதாவது இன்றிலிருந்து சுமார் 2700 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனின் எழும்புக் கூடு என்று ஆய்வு நிபுணர்கள் சொல்கிறார்கள். இதிலிருந்து மனித உடலை கெட்டுப் போகாமல் பாதுகாக்கும் பழக்கம் அப்போதே இருந்திருப்பதாக தெரியவருகிறது.

# 300 கி.மீ. வேகத்தில் செல்லும் புல்லெட் ரயில்



தாய்வானில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட இருக்கும் அதிவேக புல்லெட் ரயில் இது மணிக்கு300 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் இந்த புல்லெட் ரயில் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து தாய்பே நகருக்கும் காவோசிங் நகருக்கும் இடையே சேவையிலீடுபடுத்தப்பட இருக்கிறது. இந்த நகரங்களுக்கு இடையே உள்ள தூரம் 345 கி.மீ. சோதனை ஓட்டத்தை முடித்துக் கொண்டு நிலையத்தில் வந்து நிற்கும் இந்த புல்லெட் ரயில் ஜப்பான் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.

# ஆண்களை விட பெண்களுக்கு ஆயுள் அதிகம்

பெண்களைக் காட்டிலும் ஆண்கள் வெகு சீக்கிரத்திலேயே உயிரிழக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன தெரியுமா? இதயம் தான்.

ஆண்களைப் பொறுத்தவரை வயது ஆக ஆக இதயத்தின் செயற்றிறன் குறைந்து கொண்டே போகிறது. அதாவது 18 முதல் 75 வயது வரையிலான காலத்தில் ஆண்களின் இதய ஆரோக்கியம் 20 முதல் 25 சதவீதம் வரை குறைகிறது. இதனால் சுருங்கி விரிந்து ரத்தத்தை பம்ப் செய்யும் ஆற்றலை அவர்களுடைய இதயம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிடுகிறது ஆனால் பெண்களுக்கு இப்படி இல்லை. அவர்களுடைய இதய ஆரோக்கியம் வயது காரணமாக பாதிக்கப் படுவதில்லை.

இதயம் சுருங்கி விரிவதற்கு 'Contractile cells' எனப்படும் செல்கள் ஆற்றும் பங்கு மிக முக்கியமானது. ஆண்களுக்கு வயது ஏறும் போது இந்த முக்கியமான செல்கள் இறந்துவிடும். அவை மறுபடியும் புதுப்பிக்கப்படுவதில்லை. ஆனால் பெண்களுக்கு இத்தகைய இழப்பு குறைவு. இதனால் தான் அவர்கள் ஆண்களைக் காட்டிலும் அதிக நாள் உயிர் வாழ்கிறார்கள். உலக அளவிலான சராசரிப்படி ஆண்கள் 75 வயது வரையிலும், பெண்கள் 80 வயது வரையிலும் உயிர் வாழ்கிறார்கள்.

# குழந்தைகளின் பொது அறிவுக்கும் அயடின் உப்புக்கும் தொடர்புண்டு

குழந்தைகளின் பொது அறிவுக்கும் அயடின் உப்புக்கும் தொடர்புள்ளது. அயடின் உப்புச் சத்து குறைந்தால் குழந்தைகளின் பொது அறிவு மங்கிப் போய் விடுகிறது. இது ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் நாடு முழுவதும் அயடின் உப்புச் சத்துக் குறைபாடுகள் பற்றி 239 மாவட்டங்களில் ஆய்வு நடத்தப் பட்டது. ஆந்திராவில் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் நடந்த ஆய்வின்போது 64 சதவீதம் பேருக்கு அயடின் உப்புச் சத்து குறைவாக இருந்தது தெரியவந்தது. 5 மாவட்டங்களில் குழந்தைகளின் பொது அறிவுத் திறனை சோதித்துப் பார்த்ததில் சாதாரண பொது அறிவுக்கும் கீழ் நிலையில் 15 சதவீதம் பேர் இருந்தது தெரியவந்தது. அவர்களுக்கு அயடின் பற்றாக் குறை தான் காரணம் என முடிவு செய்யப்பட்டது. மேலும் பெரியவர்களுக்கு இதனால் மன நிலையே பாதித்துள்ளது. வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பத்தில் தான் இந்த பாதிப்பு அதிகம் என்றும் கண்டறியப் பட்டுள்ளது.

# உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானம்

உலகிலேயே மிகப்பெரிய பயணிகள் விமானத்தை ஏர்பஸ் நிறுவனம் தயாரித்து இருக்கிறது. "சூப்பர் ஜம்போ-ஏ-380" இந்த விமானத்தில் 600 பயணிகள் வரை பயணம் செய்யலாம். இந்த இரட்டை மாடி சூப்பர் ஜம்போ விமானத்தின் இறகுகள் மட்டுமே 262 அடி நீளம் இருக்கிறது. போயிங் ரக விமானங்களுக்கு சரியான அடி கொடுக்கும் வகையில் இந்த சூப்பர் ஜம்போ ஏர்பஸ் விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் செலவு 15சதவீதம் வரை இதில் குறைவாக செலவாகிறதாம். இதன் அறிமுக விழா பிரான்ஸ் நாட்டின் டொலூசி நகரில் நடந்தது. பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயர் உட்பட ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் மற்றும் 5000 பேர் இதில் கலந்து கொண்டனர். இந்த புதிய ஏ -380 சூப்பர் ஜம்போ ஏர்பஸ் விமானத்துக்கு இப்போதே 14 நாடுகள் விண்ணப்பம் கொடுத்து விட்டன. அடுத்த ஆண்டு தான் இந்த விமானம் விநியோகம் செய்யப்படும். சிங்கப்பூர்தான் முதன்முதலில் இதைப் பயணிகள்போக்குவரத்துக்கு பயன்படுத்த இருக்கிறது.

# சடலக் குவியலுக்குள் தங்கையைத் தேடியும் அவள் உடலை நான் காணவில்லை

அ. லோகீசன்

பகுதி - 09






**ஒன்பது ஆண்டுகளின் பின் தனது அன்புத் தங்கையை 24 ஆம் திகதி செந்தளிர் சிறுவர் இல்லத்தில் சந்தித்து இரண்டாம் நாள் அவளை சுனாமிப் பேரலைகள் காவுகொண்டன. இறுதியில் அவளின் உடலையாவது காணவேண்டும் என்ற துடிப்பில் சடலக்குவியலுக்குள் எல்லாம் தேடியும் கிடைக்காமல் போய்விட்ட துயர் படிந்த சம்பவத்தை விபரிக்கிறார் 25 வயதுடைய அர்ச்சுனன் மோகன் என்ற அண்ணன்.**

**எங்கள்** குடும்பம் ஆறுபேரைக் கொண்டது. நெடுங்கேணி ஒலுமடுவை வசிப்பிடமாகக் கொண்டவர்கள். நான்தான் எங்கள் குடும்பத்தின் மூத்தபிள்ளை. நான் சிறுவயதில் இருந்தே பெற்றோரைப் பிரிந்து தான் வாழ்ந்தேன். இப்படியே இருக்க ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தும் பின்னர் ரணகோச இராணுவ நடவடிக்கை காரணமாகவும் இடம்பெயர்ந்து மடுவுக்குப் போய் விட்டனர். அப்போது நான் தனித்துப் போய் விட்டேன். ஆனால் வீட்டுக்காரருடன் கடிதம் மூலம் தொடர்பு வைத்திருந்தேன். இப்படியிருக்க 2000 ஆம் ஆண்டு எனது அப்பா சுகயீனம் காரணமாக இறந்துவிட்டார். இந்த நிலையில் அம்மாவும் இரண்டு தம்பியும், தங்கச்சியும்தான் இருந்தனர். அதன்பின்னர் அவர்களுடன் எனக்கிருந்த தொடர்பு இல்லாமல் போய்விட்டது. எனது தங்கச்சியை நான் ஒரு வயதில் பார்த்ததின் பிறகு காணவே இல்லை. எனது தங்கச்சியின் நிலை என்ன அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது பற்றி எதுவுமே தெரியாமல் இருந்தது. இப்படியே இருக்க அம்மா மனநோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கிடைத்தது. எனக்கு என்ன செய்வது என்றே தெரியாமல் இருந்தது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு எட்டாம் மாதம் எனது தங்கையைச் செந்தளிர் இல்லத்தில் சேர்த்திருந்தார்கள். நான் ஒரு வயதில் பார்த்த எனது ஆசைத் தங்கை செந்தளிரில் தான் இருக்கிறாள் என்ற விடயம் எனக்குத் தெரியாது. அம்மாவின் நோய் ஓரளவு சுகமடைந்த பிறகு தங்கச்சியைத் தேடி அலைந்திருக்கிறார். இப்படி இருந்த பொழுது அம்மா என்னைச் சந்தித்தார். அதன் பிறகு தான் எனக்கு என்ர தங்கச்சி செந்தளிர் இல்லத்தில் நிக்கிறாள் என்ற விடயம் தெரிந்தது. அதுக்குப் பிறகு மார்கழிமாதம் 24 ஆம் திகதி என் ஆசைத் தங்கையைப் பார்ப்பதற்காக நானும் இன்னொரு போராளியும் செந்தளிர் இல்லம் நோக்கிப் போனோம்.



எனக்கு தங்கச்சியைத் தெரியாது. கற்பனையில் தான் ஒரு உருவத்தை வைத்திருந்தேன். அவளைப் பிரிந்து ஒன்பது வருடங்கள் கடந்துபோய்விட்டன. என் மனதுக்குள் ஒன்பது வருடங்களாக வாழ்ந்து வந்த கற்பனைத் தங்கையை இன்று நேரில் காணப்போகிறேன் என்ற மகிழ்வு எனக்குள் எங்கும் ஓடியது.

அந்தப்பாலத்தைத் தாண்டி செந்தளிர் இல்ல வாசலில் போய் அங்கிருந்தவர்களிடம் விடயத்தைத் தெரியப்படுத்தினேன். அங்கே கனக்கப் பிள்ளைகள் நின்றார்கள். எனக்கு எனது தங்கச்சியைக் கண்டுபிடிக்க இயலவில்லை. அதனால் நர்த்திகா என்ற ஆள் நிக்கிறாவா..? என்று கேட்டேன். அவர்கள் ஒரு பிள்ளையைக் கூட்டி வந்தார்கள். அந்தப்பிள்ளை என்னையும் நான் அந்தப் பிள்ளையையும் வடிவாய்ப்பார்த்தோம். என்னால் என் தங்கை இவள்தான் என்பதை இனங்காண முடியவில்லை. என்தங்கை இவள்தானா? கேள்வியுடன் தவிப்பு மட்டும் என்னுள் அலைமோதிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் அந்தப் பிள்ளையைத் தூக்கி என்மடியில் வைத்துக் கதைத்தேன். அவள் அழ ஆரம்பித்து விட்டாள். நான் அவளை அழக்கூடாது என்று தேற்றி ஆறுதல் சொன்னேன்.

ஆறுதல் சொல்லிவிட்டு அந்தப் பிள்ளையிடம் உங்கள் வீட்டில் எத்தனை பேர்? அம்மா அப்பாவின் பெயர் என்ன? அண்ணா என்ன செய்கிறார்? அவற்ற பெயர் என்ன? என்றெல்லாம் கேட்டேன்.

"அவள் சொன்னாள் எங்களுக்கு ஒரு மூத்த அண்ணா இயக்கத்தில இருக்கிறார். அவருக்கு பெயர் மோகன் எண்டு அம்மா அடிக்கடி சொல்லுவா" என்று கண்ணீர் சொரிய விம்மி விம்மிக் கூறினாள். எனக்கு ஒரு புறத்தில் கவலையும் மறுபுறத்தில் மட்டற்ற மகிழ்ச்சியும் ஏற்பட்டது. என்னை விட்டுப் பிரிந்திருந்த தங்கை நான் கற்பனையில் கட்டி வளர்த்த தங்கை இவள் தான். அவளைக் கண்டுபிடித்துவிட்டேன் என்ற ஆனந்தம் என்னை எங்கையோ கொண்டு போய்விட்டது.

என் அருமைத் தங்கை என்னிடம் அழுது கொண்டு சொன்னாள் " என்னை அம்மாவைக் கூட்டிக்கொண்டுபோய் காட்டுங்கள் அண்ணா அம்மாவைப் பார்க்க ஆசையாய் இருக்கிறது" என்றாள். சிறிது நேரம் இருவரும் கண்கலங்கி அழுதோம். தங்கையைக் கண்ட மகிழ்வு எனக்கும் அண்ணாவைக் கண்ட மகிழ்வு தங்கைக்கும் இருந்தது. இப்படியாக இரண்டு மணிநேரம் ஓடிக் கழிந்துவிட்டது. நான் என் தங்கைக்கு இஞ்ச இருந்து நல்லாப் படிக்க வேணும். பிள்ளை படிக்கிறத்துக்காகத்தான் இஞ்ச கொண்டு வந்து சேர்த்தனாங்கள் என்றெல்லாம் அறிவுரைகள் சொன்னேன். கடைசியாக நான் வெளிக்கிடத் தயாரானபோது தங்கச்சி கேட்டாள் " அண்ணா என்னை லீவில வீட்டை கூட்டிக்கொண்டுபோங்கோ எல்லாப் பிள்ளையளும் லீவில போய்வருகினம். நான்தான் தனிய என்னை உங்களோட கூட்டிக்கொண்டு போங்கோ" எண்டு அழுதாள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒன்பது வருடத்தின் பிறகு கண்ட என் தங்கையின் ஆசையை என்னால் அப்போது நிறைவேற்ற முடியவில்லை. மனம் விம்மியது. 26 ஆம் திகதி அண்ணா பிள்ளைக்கு உடுப்பெல்லாம் எடுத்துக்கொண்டு வந்து லீவில கூட்டிக்கொண்டு போறன் என்று தங்கச்சியிடம் கூறிவிட்டு, அண்ணா இப்ப போட்டுவாறன் என்று தங்கச்சியிடம் சொன்னேன். அதற்கு "26 ஆம் திகதி கட்டாயம் வரவேணும் நான் பார்த்துக் கொண்டு இருப்பன் என்று அழுது கொண்டே கூறினாள்" எனக்கு என் தங்கையை விட்டுப் பிரியவே மனமில்லாமல் இருந்தது. நான் போய்க்கொண்டிருக்க அவள் வாசலில் நின்று என்னை மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றாள்.

இப்படியே அன்றைய பொழுது தங்கச்சியுடன் மறைந்துபோனது.

26 ஆம் திகதி பொழுது விடிந்துவிட்டது. எனது கடமையைச் செய்து கொண்டிருந்தேன். அப்போது எங்களுக்கு முல்லைத்தீவில் கடல் பெருகிக் கனபேர் இறந்து விட்டதாகத் தகவல் வந்தது. எனக்கு உடனே இதயம் நின்றுவிட்டது போல இருந்தது. சிந்தனை எல்லாம் தங்கச்சிமேல்தான் இருந்தது. அவளுக்கு ஏதும் நேர்ந்திருக்குமோ? இல்லை அவள் நிச்சயம் தப்பியிருப்பாள் என்று என் மனம் சொன்னது. என்றாலும் மனம் படபடத்துக்கொண்டே இருந்தது. நான் உடனடியாகவே பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்துடன் தொடர்பு கொண்டு செந்தளிர் இல்லத்தில் இருந்தவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று கேட்டேன்.

அவர்கள் அதில் இருந்தவர்களின் நிலைமை தெரியவில்லை. பலர் தப்பிவிட்டனர். சிலர் உயிரிழந்துள்ளனர். தப்பியவர்கள் முகாம்களில் இருக்கின்றனர். என்று கூறி தப்பியவர்களின் பெயர் விபரம் ஒன்றையும் தந்தார்கள். அதில் என் தங்கையின் பெயரும் இருக்கிறதா? என்று பார்த்தேன். ஆனால் அதில் தங்கையின் பெயர் இல்லை. எனக்குள் ஒரு மாதிரி இருந்தது.

இதன்பிறகு முள்ளியவளைப் பகுதியில் தப்பியவர்கள் இருந்த முகாம்கள் எல்லாவற்றுக்கும் சென்று தேடிப்பார்த்தோம். தங்கையைக் காணவே இல்லை. அதன் பிறகு ஒலி பெருக்கியில் நர்த்திகா என்ற செந்தளிர் இல்லப்பிள்ளை எங்கிருந்தாலும் அறிவிப்பு மையத்திற்கு வருமாறு அறிவித்தல் கொடுத்தோம். அதிலும் தங்கச்சி இல்லை. எனக்கு என் தங்கை தப்பியிருப்பாள் என்ற நம்பிக்கை இல்லாமல் போய் கொண்டிருந்தது. என்ன செய்வது என்றுகூடத் தெரியவில்லை. இப்படியே 26 ஆம் திகதிப்பொழுது சோகமாகக் கழிந்து போனது.



இருபத்தியேழாம் திகதி விடிந்தது. நானும் விடுதலை என்கிற போராளியுமாக தங்கச்சியைத் தேடி வெளிக்கிட்டோம். என் தங்கச்சியை ஒன்பது வருடத்துக்குப் பிறகு எந்த இடத்தில் வைத்து பார்த்தனோ அவள் என்னை " அண்ணா எண்டு எதில வைச்சுக் கூப்பிட்டாளோ அந்த இடத்துக்குப் போய்ப் பார்த்தேன். அங்க ஒண்டையுமே காணேல்ல. எல்லாம் இடிஞ்சுபோய்க்கிடந்தது. அதைப் பார்க்க எனக்கு அழுகை வந்துவிட்டது. அப்படியே போய் முல்லைத்தீவு மத்திய விளையாட்டு மைதானத்தில் இருந்து தங்கச்சியைத் தேடினோம். தங்கச்சியின்ர அளவில இருக்கிற சடலங்களை எடுக்கேக்குள்ள எனக்கு இதயம் படக்குப் படக்கெண்டு அடிச்சது. இப்படி பதினைந்து சடலத்துக்கு மேல் எடுத்திருப்போம். அதற்குள்ளும் தங்கச்சி இல்லை. இப்படியே யோசிச்சுக் கொண்டிருக்கேக்குள்ள நர்த்திகா என்ற பிள்ளையின்ர உடல் வள்ளிபுனத்தில் இருக்கிறது என்ற தகவல் பின்னேரம் மூன்றரை மணிக்குக் கிடைத்தது. நான் உடன அங்கிருந்து வெளிக்கிட்டு ஐந்தரை மணியிருக்கும் வள்ளிபுனத்துக்குத் தங்கச்சியின்ர உடலையாவது பார்ப்பம் எண்டு போனேன. ஆனால் நான் போறதுக்கிடையில என்ர தங்கச்சியோடை பதினெட்டுப் பேரையும் அடக்கம் செய்து போட்டினம்.

ஒன்பது வருடத்துக்குப் பிறகு அண்ணாவைக் கண்ட ஆசைத் தங்கச்சி இருபத்தாறாம் திகதி கட்டாயம் வாங்கோ நான் பாத்துக்கொண்டு நிப்பன் எண்டு தான் கடைசியாகச் சொன்னாள் அவள் அண்ணா வருவான் என்று ஆவலுடன் பார்த்திருக்க அலை வந்து கொண்டு போய் விட்டது. நான் அவளின் உடம்பைக் கூட பார்க்கவில்லை என்று தனது துயரமான நெஞ்சை உலுப்புகின்ற அந்த சம்பவத்தை கூறி கண்ணீர் வடித்தான் அந்தப் போராளி.

அடுத்த தொடரில் முல்லைத்தீவு தீர்த்தக்கரையில் விளையாடிக்கொண்டிருந்து கடல் பெருக்கில் சிக்கி உயிர் தப்பிய 11 வயதுச் சிறுவன் தான் கண்ட அவலங்களையும், அதில் இருந்து எப்படித் தப்பினார் என்ற நம்ப முடியாது. ஆனால், உண்மைச் சம்பங்களை எங்களிடம் கூறினார். அதனை அடுத்த பகுதியில் தருகிறோம்.

(தொடரும்)

# தமிழருக்கு 50 வருடங்களாக செய்ததையே சிங்கள தே.கட்சிகள் இப்போதும் செய்கின்றன

## -ம.ம. முன்னணித் தலைவர் சந்திரசேகரன்

(திருகோணமலை)

**"ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள தேசியக்கட்சிகள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் புறக்கணித்தே ஆட்சி நடத்தி வந்தன. இன்று கூட அரசாங்கத்துடன் சேர்ந்த அரசியல்கட்சி வடக்கு- கிழக்கு நிவாரண, புனர்வாழ்வு, புனர்நிர்மாணப்பணிகளை மத்திய அரசே மேற் கொள்ள வேண்டும் என்று கூறி தமிழ் பேசும் மக்களை ஒதுக்கும் முயற சியில் தான் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரி வித்துள்ளார்.**

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திருமலை முற்றவெளியில் நடைபெற்ற தேசிய துயர் நாளை ஒட்டிய கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்கினேஸ்வரன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. தமிழ் மக்கள் பேரவையும் திருமலை மாவட்ட தமிழ் மீனவர்அமையமும் கூட்டாக இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந் தன. ம.ம.மு.தலைவர் சந்திர சேகரன தொடர்ந்து பேசும் போது வன்னிப் பிராந்தியத்திற்கு அரசாங்கத்தின் சுனாமி நிவாரண, புனர்வாழ்வு உதவிகள் போதுமான அளவில் சென்றடையவில்லை. திருமலை மாவட்டத்திலும் குறிப்பிட்ட சிலபகுதிகளுக்குத் தான் அரசின் நிவாரணம் கிடைப்பதாக முறையிடப் பட்டுள்ளது. தொடர்ந்து அரைநூற் றாண்டாக இடம்பெற்று வரும் புறக்கணிப்புக்கள் தான் தமிழரின்விடுதலைப் போராட்டத் துக்குக் காலாக அமைந்தது என்பதை தேசியக கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்" என்றார். (25)

# பாதிக்கப்பட்டவர்த்தகத்திற்கு 50 இலட்சம் வரை உடனடிக்கடன்

## -நிதியமைச்சர் சரத் அமுனுகம அறிவிப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வர்த்தக மற்றும் சேதமடைந்த சொத்துக்களுக்கென 50 இலட்சம் வரை உத்தரவாதமின்றி உடனடிக்கடன்வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவத்துள்ளார்.

நேற்று காலிமாவட்ட செயலகத்தில் உரையாற்றிய வேளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மக்கள் வங்கியினாலும், இலங்கை வங்கியினாலும் வழங்கப்படும் இக்கடனுக்கு ஒரு வருடகாலத்துக்கு வட்டி அறவிடப்படமாட்டாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் 3ஆம் திகதி கொழும்பு வருகிறார்

(திருகோணமலை)

நெதர்லாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் பேர்ணாட் பொட் பெப்ரவரி 3ஆம் திகதி கொழும்புக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றார். பெப்ரவரி 4ஆம் திகதி காலை வரை கொழும பில் தங்கி நிற்கும் அவர் சனாதிபதி, பிரதமர், வெளியுறவு அமைச்சர், எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் பேர்ணாட்பொட் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவார் என்று நெதர்லாந்து தூதரக வட்டாரங்கள் தெரி வித்தன. (25)

### -புலிகளின் விமானங்கள் பற்றி-

# நோர்வே தரப்பின் கவனத்திற்கு சிறிலங்கா கொண்டு சென்றுள்ளதாம்

விடுதலைப்புலிகளிடம் இரண்டு விமானங்கள் இருப்பது தொடர் பாக சிறிலங்கா அரசாங்கம் நோர் வே தரப்பின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

இரணைமடுப்பகுதியில் விமான ஓடுபாதையில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த இரண்டு விமானங்கள் தொடர்பான புகைப்படங்களும் நோர்வே தரப்பிடம் கையளித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது. அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் செய்து கொண்ட புரிந்து ணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் இது என இலங்கை அரசாங்கம் தனது கண்டனத்தையும் வெளிப் படுத்தியுள்ளது. இயந்திரவிமானம் ஒன்றும், இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட விமானம் ஒன்றும் விமான ஓடுபாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை இஸ்ரேலி யத் தயாரிப்பு ஆளில்லா உளவு விமானம் படம் பிடித்துள்ளதாக இலங்கை அரசாங்கம் நோர்வே தரப்புக்கு தெரியப்படுத்தியுள்ளது.

# எமது மக்களுக்கு தற்காலிக குடியிருப்பு வசதிகளையேனும் செய்யாத அரசு தெற்கில் நிரந்தரக் கட்டுமானத்திற்கு அடிக்கல்

## - பா. உறுப்பினர் சிவாஜிலிங்கம் கவலை

சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களிலேயே வாழ்கின்ற னர். எமது மக்களைத் தற்காலிகமாகக கூட மீளக்குடியேற்ற முடியாத நிலை காணப்படுகிறது. ஆனால் தென் பகுதியில் நிரந்தர மீள் கட்டு மானத்துக்கான அடிக்கல் நாட்டப் பட்டு வருகின்றது என்று தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் எம் கே. சிவாஜிலிங்கம் கவலை தெரிவித்தார். வடமராட்சியில் வைத்து கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது;

அரசாங்கத்தின் நிவாரண உதவிகள் இன்னமும் இப் பகுதி மக்களை வந்தடையவில்லை. தொண்டர் நிறுவனங்களால் வழங்கப பட்ட உதவிகள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் உத விகளே மக்களுக்கு [illegible]ங்கப்பட்டு வருகின்றன. நலன்புரி நிலையங் களைத் தவிர்த்து உறவினர் நண்பர் களின் வீடுகளில் தங்கியுள்ளவர் களுக்கு எந்த விதமான நிவாரண உதவிகளும் இங்கு வழங்கப்பட வில்லை. சுனாமி நடைபெற்று ஒரு மாத காலமாகி விட்ட போதிலும் எந்த விதமான நிவாரண உதவிகளும் கிடைக்காமை குறித்து மக்கள்அதிருப்தி அடைந்துள்ளனர். எமது பகுதியில் இன்னமும் இடைத்தங்கல் முகாம்கள் கூட அமைக்கப்படவில்லை. ஆனால் தென்பகுதியில் மீள் குடியேற்றத் துக்கான நிரந்தரக் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப் பட்டு வருகின்றன.

வட பகுதியில் கடற்றொழிலை ஆரம்பிப்பதற்கு கடற்றொழிலாளர் களிடம் படகுகளோ, வலைகளோ, உபகரணங்களோ எதுவும் இல்லை. அவை வழங்கப்பட வேண்டும்.

இப் பகுதிக்கு வரும் நிறுவனங் கள் பல பட்டியல்களை எடுத்துச் செல்கின்றன. ஆனால் உருப்படி யான உதவி எதுவும் கிடைக்கவில் லை. தற்காலிகமாக முகாம் அமைப்பதற்கான கூடாரங்கள் கூட இன்னமும் வந்து சேரவில்லை. அத்தி யாவசியப் பொருட்கள் கிடைக்காத நிலையில் மக்கள் கஷ்ரப்படுகின்ற னர் என்றார்.

# குடும்பப்பெண் மீது பாலியல் வல்லுறவு தமிழ் இளைஞனுக்கு லண்டனில் சிறை

லண்டனில் தமிழ்க்குடும்பப் பெண்ணொருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ஒரு வருக்கு நீதிமன்றம் 6 வருட சிறைத் தண்டனை வழங்கியுள்ளது. இவர் தனது தண்டனைக் காலத்தை முடித்துக் கொண்டு இலங்கைக்குச் செல்ல வேண்டுமென்றும் நீதிமன் றம் அறிவித்துள்ளதுடன் இவரை நாடுகடத்துமாறும் நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு மாசிமாதம் இவர் இந்தச் செயலில் ஈடுபட்டதாகவும் 26 வயதான குடும்பப் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி யதாகவும் செய்திகள் தெரிவிக் கின்றன. இவருடன் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் இச்செயலில் இறங்கியதாகவும் அவர்களைப் பொலிசார் தேடிவருவதாகவும் தெரிய வருவதுடன் சம்பவத்துடன் தொடர் புடையவரின் சகோதரன் துருக்கிக் கடையருகில் அண்மையில் தமிழ் இளைஞர்களால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

### -லண்டனில் தமிழர்களின்-

# குற்றச் செயல்களைத் தடுக்க "ஒபறேசன் என்பவர்!"

லண்டனில் தமிழர்களின் குற்றங் களைக் கண்டறிய ஒபறேசன் என்பவர் என்ற விசேட பொலிஸ் அதிரடிப்படைப்பிரிவு ஒன்று உரு வாக்கப்பட்டுள்ளது. இவர்கள் சந் தேகத்திற்கிடமான வீடுகள், நகரங் கள் கூட்டங்களில் திடீரென்று உட் புகுந்து தேடுதல்களை நடாத்து வார்கள் என்று அறியமுடிகிறது. லண்டனில் வாழ்ந்து வரும் ஒரு இலட்சம் தமிழ் மக்களின் நடவடிக் கைகளை இந்த விசேட பிரிவினர் கண்காணித்து வருவதாக அறி விக்கப்பட்டுள்ளது. இந்தப் படைப் பிரிவிற்கு கொமாண்டர் அல்பேட் கிக்கோக் தலைமை தாங்குகிறார். அண்மையில் இவர்கள் மேற் கொண்ட திடீர் நடவடிக்கையால் சட்டரீதியற்ற வியாபாரங்கள் கஞ்சா வியாபாரம் கசிப்புக் காய்ச்சுதல் போன்ற செயலில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# நிவாரணப் பொருட்களுடன் வந்த எட்டுத் தொலைத் தொடர்பு கருவிகள்

## –சிறிலங்கா சுங்கத்துறை கைப்பற்றியுள்ளது

கடல் பெருக்கால் பாதிக்கப் பட்ட மக்களுக்காக கொண்டு வரப்படும் நிவாரணப்பொருட்களின் மத்தியில் 8 தொலைத்தொடர்புக் கருவிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தின் முகவரிக்கு இவை எடுத்து வரப்பட்ட நிலையில் கட்டுநாயக்க வானூர்தித் தளத்தில் வைத்து சிறி லங்கா சுங்கத்திணைக்களத் தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் 2இரும்புப் பெட்டிகள் மற்றும் கடதாசிப்பெட்டி கள் ஆகியவற்றில் இவை பொதி செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எந்த ஒரு அதிகார பூர்வ அங்கீகாரம் இன்றி கொண்டுவரப் பட்ட இந்தத் தொலைத் தொடர்புக் கருவிகள் தொடர்பில் குற்றப்புல னாய்வுப் பிரிவினர் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

# சர்வதேச உதவிகளைக் கண்காணிக்க அரசாங்கத்தால் விசேட குழு நியமனம்

இலங்கைக்கான அனைத்து விதமான சர்வதேச உதவிகளை யும் கண்காணிப்பதற்கான குழு ஒன்றை சிறிலங்கா அரசாங்கம் ஏற் படுத்தியுள்ளது.

அண்மையில் கட்டுநாயக்கா வானூர்தி மையத்தில் இரண்டு உலங்கு வானூர்திகளின் உதிரிப் பாகங்கள் மீட்கப்பட்டமையைத் தொடர்ந்து அரசாங்கம் இந்த நடவடிக்கையினை மேற்கொண் டுள்ளது. 45 கொள்கலன்களில் வந்து சேர்ந்துள்ள நிவாரணப் பொருட்கள் இதுவரை சோதனை யிடப்படாமல் இருப்பதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைக் கண்காணிக்கும் வகையிலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (32)

# 5 ஈழத்தமிழருக்கு எதிராக லண்டனில் கொலைக் குற்றச்சாட்டு

ஈழத்தமிழர் 5 பேருக்கு எதிராக பிரித்தானியப் பிரஜை ஒருவர் கொலைக்குற்ற வழக்குத் தாக்கல் செய்துள்ளார். திருகுமார் சோதிலிங்கம் (28 -வயது) என்ப வரின் கொலையுடன் தொடர்பு டையவர்களுக்கு எதிராகவே கொலைக் குற்றம்சுமத் தப்பட்டுள் ளது. சுகந்தன் நடராஜா (22- வயது), சாந்தன், விஜய குமார் தர்மலிங்கம் (31 வயது) , றஞ்சன் சண்முகம்நாதன் (26 -வயது), மோகன்ராஜ் தங்கறாஜா (28- வயது), சந்திரன் செல்வ ரட்ணம் (21- வயது) ஆகியோருக்கு எதிராகவே கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர்களின் நீதிமன்ற விசாரணைகளைத் தொடர்ந்து இவர்கள் நாடுகடத் தப்படலாம்என்று அறியமுடிகிறது.

# ஆந்திராவில் நக்சலைட்டுக்கள் செயற்பாடு அதிகரிப்பு

## பொலிசார் சென்ற பேருந்து மீதும் தாக்குதல்!

**ஆந்திராவில் நக்சலைட்டுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது பொலிசார் சென்ற பேருந்து குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.**

ஆந்திரா மாநிலத்தில் நக்சலைட்டுக்களுக்கும், மாநில அரசுக்கும் இடையே சமரசப்பேச்சுவார்த்தையில் முறிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து நக்சலைட்டுக்களின் தாக்குதல்கள் அதிகரித்துவிட்டன. அடிலாபக் மாவட்டம், பொப்பாரம் கிராம முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர் லிங்கையாவை நக்சலைட்டுக்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்கள். இவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். நக்சலைட்டுக்கள் பற்றி பொலி சாருக்கு அவர் தகவல் கொடுப்பதால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிகிறது.

குண்டூர் மாவட்டம் யோதனாம கிராமம் அருகே நேற்று முந்தினம் காலையில் ஒரு அரசு பேருந்து சென்று கொண்டு இருந்தது. அதில் 55 பயணிகள் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆயுதம் தாங்கிய பொலிசார். 10 ஆசிரியர்களும் அந்தப்பேருந்தில் இருந்தார்கள்.

பூமியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியை நக்சலைட்டுக்கள் வெடிக்கச் செய்து பேருந்தைத் தகர்த்தார்கள். உடனே பேருந்துக்குள் இருந்த பொலிசார் காட்டுக்குள் பதுங்கியிருந்த நக்சலைட்டுக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். பொலிசாருக்கும், நக்சலைட்டுக்களுக்குமிடையே சிறிது நேரம் மோதல் இடம்பெற்றது. குண்டுவெடித்ததில் பேருந்தின் முன் பகுதி சேதமடைந்தது எனினும் எவருக்கும் காயமேற்படவில்லை.

நக்சலைட்டுக்கள் அதிகம் நிறைந்த யோதானாம், எம்மாஜிகுடம் ஆகிய பகுதிகள் அடர்ந்த காடுகள் நிறைந்தவை. அங்கு நக்சலைட்டுக்கள் அதிகமாகப் பதுங்கி இருப்பது பொலிசாருக்குத் தெரியவந்தது. அவர்களை வேட்டையாடுவதற்காக அரசு பேருந்தில் ஆயுதம் தாங்கிய பொலிசார் சென்றனர்.



மயிலாடுதுறை அருகே நடந்த விபத்தில் திருமண வீட்டுக்குச் சென்ற 3 பெண்கள் நசுங்கி இறந்தனர். இதில் விபத்துக்குள்ளான வான் நொருங்கிக் கிடப்பதைப் படத்தில் காணலாம்

# இந்தியப் பிரதமர் இல்லத்தைப் பாதுகாக்கும் படையினரில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்!

## -சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் வீட்டில் துப்பாக்கிக் குண்டு வெடித்ததில் பாதுகாப்பு வீரர் படுகாயமடைந்தார்.

பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நாட்டிலேயே உயர் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. அவரது வீட்டில் 24 மணிநேரமும் விசேடபாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையினர், பொலிசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். பல அடுக்குகள் கொண்ட பாதுகாப்பு வளையம் அமைத்து இப் பணிகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் கடந்த புதன் கிழமை பிரதமரின் வீட்டில் திடீரென்று துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. இச் சத்தத்தைக் கேட்டதும் பாதுகாப்பு அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். துப்பாக்கிச் சத்தம் கேட்ட இடத்தை நோக்கி ஓடினார்கள். அங்கு பாதுகாப்புப் படையின் வீரர் ஒருவர் உடலில் குண்டு பாய்ந்த நிலையில் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். உடனடியாக அவரை அம்பியூலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

குண்டுக் காயத்துடன் கிடந்த பாதுகாப்பு வீரரின் பெயர் எஸ்.பி.சிங். இவர் பிரதமர் வீட்டில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் என்பது விசாரணையில் தெரியவந்தது. இருப்பினும் அவர் மீது எப்படி துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. அவர் தற்கொலைக்கு முயன்றாரா அல்லது தானாகவே துப்பாக்கிக் குண்டு வெடித்ததா என்பது குறித்தும் பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# மோசடி செய்த ஊழியரை நிர்வாகம் வேலையிலிருந்து நீக்கலாம்

## சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

(புதுடில்லி)

மோசடி செய்த ஊழியரை நிர்வாகம் வேலை நீக்கம் செய்யலாம் என்று சுப்ரீம் கோர்டடு தீர்ப்புக் கூறியுள்ளது.

பெல்நிறுவன ஊழியர் ஒருவர் கம்பெனி பணத்தை கையாடல் செய்ததையொட்டி அவரைப் பணியில் இருந்து பெல் நிர்வாகம் நீக்கி விட்டது. இதை எதிர்த்து தொழிலாளர் நல கோர்ட்டில் அந்த ஊழியர் வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி, விசாரணைக் குழுவின் அறிக்கையில் ஊழியர் மீது குற்றம் இருப்பதை ஒத்துக்கொண்டபோதிலும் அந்த ஊழியரை வேலை நீக்கம் செய்தது கடுமையான தண்டனையாகும் என்று கூறினார்.

மீண்டும் அந்த ஊழியரை வேலையில் சேர்த்துக்கொள்ளும்படி நீதிபதி தீர்ப்புக் கூறினார். இதை எதிர்த்து ஆந்திர மாநில ஐகோர்ட்டில் பெல் நிறுவனம் மேன்முறையீடு செய்தது. தொழிலாளர் நல கோர்ட்டு தீர்ப்பை ஐகோர்ட்டு உறுதி செய்தது. இதனால் சுப்ரீம் கோர்ட்டில் பெல் நிறுவனம் மேல் முறையீடு செய்தது.

# சுனாமி பாதித்த பகுதிகளில் 'டெங்கு' பரவலாம்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

(புதுடில்லி)

"சுனாமி" பாதித்த பகுதிகளில் மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் பரவலாம் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தோனேஷியாவில் உள்ள சுமத்ரா தீவில் கடலில் ஏற்பட்ட பூகம்பம் காரணமாக 'சுனாமி' பேரலைகள் உருவாகி இந்தோனேஷியா, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தியது.

இதில் 2இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பலியானார்கள் சுனாமி பாதித்த பகுதிகளில் நிவாரணப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் 'சுனாமி' பாதித்த பகுதிகளில் மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் பரவ வாய்ப்பு இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால் அந்தப் பகுதிகளில் கண்காணிப்பை பலப்படுத்தும் படி உலக சுகாதார நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

டெங்கு மற்றும் மலேரியா காய்ச்சல் வராமல் தடுக்கவும் அதைக் கட்டுப்படுத்தவும் உலக சுகாதார நிறுவனம் ஒத்துழைப்பு அளித்து வருகிறது. இதற்காக அந்தந்த நாட்டு அதிகாரிகளுடன் சர்வதேச குழுவும் இணைந்து கண்காணிப்பு ஏற்பாடுகளை உலக சுகாதார நிறுவனம் கவனித்து வருகிறது. மேலும் உள்ளூர் ஊழியர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்தத் தகவலை உலக சுகாதார நிறுவன உதவிப் பணிப்பாளர் ஜெனரல் ஜாக்ஜோ தெரிவித்துள்ளார்.


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இராமநாதன் நுண்கலைக் கழக (இசை/நடனம் /சித்திரமும் வடிவமைப்பும்)

## மாணவர்களுக்கான அறிவித்தல்

இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்களுக்கான மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 08.02.2005 இலும் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 10.02.2005 இலும் ஆரம்பமாகவுள்ளன.

மாணவர்கள் பரீட்சை நேர அட்டவணையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையிலும், இராமநாதன் நுண்கலைக் கழக விளம்பரப் பலகையிலும் பார்வையிடலாம்

துணைவேந்தர்
28. 01. 2005

(சி.11227)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.


# ரயில் நிலையத்தை சூறையாடிய குற்றச்சாட்டில் எம்.பி.கைது!

ஆந்திர மாநிலத்தின் சித்தூரில் ரயில் நிலையத்தை சூறையாடியதாக தெலுங்கு தேச கட்சி எம்.பி. கைது செய்யப்பட்டுள்ளார். தெலுங்கு தேச கட்சியை சேர்ந்த எம்.எல்.ஏ.வும். முன்னாள் எம்.பியுமான ரவி கடந்த 24 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். தெலுங்கு தேச எம்.எல்.ஏ.ரவி சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி பரவியதும் தெலுங்கு தேச எம்.பி.டி.கே.ஆதிகேசவலு தலைமையில் கட்சித் தொண்டர்கள் கலவரத்தில் இறங்கினார்கள் அப்போது ரயில் நிலையங்கள் சூறையாடப்பட்டது. இதைத் தொடர்ந்து பொலிசார் ஆதிகேசவலு எம்.பி. உட்பட கட்சித் தொண்டர்கள் 26 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர் இந்த நிலையில் பொலிசார் நேற்று முன்தினம் அவர்களைக் கைது செய்து நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்தி சிறையில் அடைத்தனர்.


இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

**மாபெரும் பரிசுப்போட்டி**

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

**அம்மன் களஞ்சியம்**
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852, 5077

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11148)

# இறுதிக் கட்டத்தை நெருங்கும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்

## ரொடிக்கைத் தோற்கடித்தார் ஹெவிட்


ஹெவிட்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையருக்கான இரண்டாவது அரை யிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் லெய்ட் டன் ஹெவிட் அமெரிக்காவின் அண்டி ரொடிக்கைத் தோற்கடித்து இறுதிப்போட் டிக்குத் தெரிவானார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் நடைபெற்றுவரும் மேற்படி போட்டிகளில் உலகின் முன்னணி வீரர் ரோஜர்பெரடர் அதிர்ச்சித் தோல்வி அடைந்து வெளியேறியதைத் தொடர்ந்து ஹெவிட், ரொடிக் ஆகியோருக்கு இடையிலான அரை


மராட் ஷபின்

யிறுதிப் போட்டி மிகவும் பரபரப் புடன் எதிர்பார்க் கப்பட்டது.

போட்டியின் ஆரம்பத்தில் முதல் செட்டை 3-6 என்ற நிலையில் கைப்பற்றி ரொடிக் அதிர்ச்சி அளித் தார்.


டேவன்போட

ஆனாலும் சொந்த நாட்டின் ரசிகர்களின் பலத்த ஆதரவுடன் கடுமையாகப் போரா டிய ஹெவிட் இரண்டா வது செட்டை 7-6 என்ற நிலையில் கைப்பற் றினார்.

இதனால் இருவருக்கும் இடையிலான


செரீனா

போட்டி மேலும் விறுவிறுப் படைந் தது. இந்த நிலை யில் கடுமையாக போராடிய ஹெவிட் 3-6,7-6,(7-3)7-6(7-4)6-1 என்ற செட் கணக்கில் ரொடிக் கைத் தோற கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரி வானார். இறு திப் போட்டியில் ஹெவிட் ரஷ்யா வின் மரட் சபினை எதிர் கொள்ளவுள்ளார். இவர்களுக்கிடை யிலான இறுதிப் போட்டி நாளை நடை பெறும்.இதேவேளை பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் டேவன்போட் - செரீனா வில்லியம்ஸ் மோது கிறார்கள்.


ரொடிக்

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த முதல் அரை இறுதியில் முதல் நிலை வீரர் ரோஜர் பெரடர் (சுவிட்சர்லாந்து) 4ஆம் நிலை வீரர் மரட் ஷபினுடன் (ரஷ்யா) மோதினார்.

இதில் ரோஜர் பெரடர் வெற்றி பெறுவார் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஏனெனில் அவர் தொடர்ந்து 26 போட்டிகளில் வெற்றி பெற்று இருந்தார். ஆனால் இந்த போட்டி முடிவு எதிர்பார்ப்புக்கு மாறாக முடிந்தது ரஷ்ய வீரர் மரட்ஷபின் 5-7,6-4,5-7,76 (8-6),9-7 என்ற செட் கணக்கில் போராடி ரோஜர் பெடரரை வீழ்த் தினார். இந்த வெற்றியின் மூலம் மரட்ஷபின் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இந்த வெற்றியைப்பெற அவருக்கு 4 மணி நேரமும் 20 நிமிடமும் தேவைப்பட்டது.




அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் இரட்டையர் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் அலிசியா மொலிக்கும், ரஷ்யாவின் செலிறலானா குஸ்னெட்சோவா வெற்றிக் கிண்ணத் துடன். இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் லின்சேடேவன்போட், கொறினா மொறோறியுஜோடியைத்தோற்கடித்தார்.

## கோரஸ் செஸ் போட்டி
## 10ஆவது சுற்றில் ஆனந்த் சமன்

கோரஸ் செஸ் போட்டி நெதர்லாந்தில் நடந்து வருகிறது. இதன் 10ஆவது சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டர் விசுவநாதன் ஆனந்த். நெதர்லாந்து வீரர் லோக் வான் வெலுடன் மோதினார். 42ஆவது காய் நகர்த்தலுக்குப் பின்னர் இந்த ஆட்டம் சமனில் முடிந்தது. 10ஆவது சுற்றில் முடிவில் பீட்டர் லேகோ (ஹங்கேரி) 6 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறார். தபலோவ் (பல்கேரியா) ஆனந்த் (இந் தியா) மைக்கேல் அடம்ஸ் (இங்கிலாந்து) ஆகியோர் தலா 6 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்தில் உள்ளனர்.

## இளம் பெண்ணும் வாலிபரும் மோதும் மல்யுத்தப் போட்டி நாளை மும்பையில்



மும்பையில் உள்ள அந்தேரி விளையாட்டு வளாகத்தில் அகில இந்திய மல்யுத்தப் போட்டி நடந்து வருகிறது. அங்கு நாளை ஒரு இளம் பெண்ணும், வாலிபரும் மோதிக் கொள்ளும் மல்யுத்தம் நடைபெறவுள்ளது.

போட்டியை நடத்திவரும் சிவ சேனாக் கட்சி எம்.பி. சஞ்சய் நிருபம் இதற்கு ஏற்பாடு செய்துள் ளார். மல்யுத்த வரலாற்றில் இதற்கு முன்பு இப்படி ஆணும், பெண்ணும் பலப்பரீட்சை நடத்தியதில்லை. எனவே, இது குஸ்திப் பிரியர்களுக்கு பெரிய விருந்தாக இருக்கும் என்று சஞ்சய் நிருபம் கூறினார்.

உடல் வலிமையில் சிறந்தவர் ஆணா, பெண்ணா என்பதைத் தீர்மானிக்கப்போகும் இந்த மல்யுத்தத்தில் களம் இறங்கும் இளம் பெண்ணின் பெயர் கௌசல்யா. இவர் மல்யுத்தத்தில் சப் ஜூனியர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றவர்.


## மெய்வல்லுனர் சங்க பொதுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுனர் சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 01.02.2005 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற இருப்பதினால் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி.மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா கேட்டுக் கொண்டுள்ளார். இக்கூட்டத்திற்கு ஒரு கழகத்தில் இருந்து மூன்று அங்கத்தவர்கள் பங்குபற்றலாம் எனவும் அவர் கேட்டுள்ளார்.



கலிபோர்னியாவில் நடைபெறும் சினேகபூர்வ உதைபந்தாட்டத்தில் மோதும் சுவீடனின் கிறிஸ் தோபர் அண்டர் சனும் தென்கொரியாவின் குயின்ங் ஹோசுங்கும்.

## வி.பி. முக்கோணத் தொடர்
# லாறாவின் அதிரடித் துடுப்பாட்டத்தால் மேற்கிந்தியத்தீவுக்கு முதல் வெற்றி



அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் மூன்று நாடுகள் கலந்து கொள்ளும் வி.பி. முக்கோணக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பாகிஸ்தான் அணியை 58 ஓட்டங்களால் தோற்கடித் தது.

அடிலயிட்டில் நடை பெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவை முதலில் துடுப் பெடுத்தாடப் பணித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவு ஆரம்ப மூன்று விக்கெட்டுக்களைச் சொற்ப ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறியது.

இந்த நிலையில் ஆடுகளம் புகுந்த அணித் தலைவர் லாறாவின் அபார ஆட்டம் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களைத் திணறடித்ததுடன் நான்காவது விக்கெட்டுக்காக சந்தர்போல் - லாறா இணை 243 ஓட்டங்களை குவித்தது.

இதில் லாறா ஐந்து ஆறு ஓட்டங்கள், 12 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 138 பந்துகளில் 156 ஓட்டங்களைக் குவித்தார். சந்தர்போல் 85 ஓட்டங்களைப் பெற்றார். கெய்ன்ட்ஸ் ஆட்டமிழக்காது 18 பந்துகளில் 30 ஓட்டங்களைக் குவித்தார்.



இதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் நான்கு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 339 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் நவீட் உல் ஹசன், அன்சூர், அப்ரிடி, மொகமட் ஹபீஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளைக் கைப்பறினர்.

340 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் திறமையான துடுப்பாட்டத்தை வெளிப் படுத்தியபோதும் ஆரம்ப விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்த்தப்பட்டதால் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் யுகானா 45, றசாக் 44, ஹபீஸ் 41, இன்சமாம் உல்-ஹக் 30 ஓட்டங்களையும், அசார் மொகமட் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கிங், பிறைவோ, கெய்ன்ட்ஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், பவல், பிரெட்சோ தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக லாறா தெரிவானார்.

## சுனாமி நிவாரண நிதி கிரிக்கெட்; கொல்கத்தா போட்டி ஏப்ரலில்



உலக 11 பேர் -ஆசிய 11 பேர் அணிகள் மோதும் சுனாமி நிவாரண நிதி கிரிக்கெட் போட்டி கொல்கத்தாவில் பெப்ரவரி 13ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது.

இந்தப் போட்டி தற்போது திடீரென தள்ளி வைக்கப் பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.


அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளின் வீரர்கள் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இந்தப் போட்டி தள்ளி வைக்கப்பட்டதாக ஐ.சி.சி தெரிவித்துள்ளது.




## ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சை பரிசோதிக்க நிபுணர் நியமனம்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஹர்பஜன்சிங்கின் தூஸ்ரா வகை பந்து வீச்சு முறையை ஆராய சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) நிபுணர் ஒருவரை நியமித்துள்ளது. இதற்கிடையில் ஹர்பஜன்சிங் பந்து வீச்சு முறையை திருத்திக்கொள்ள ஆறுவார கால அவகாசத்தையும் வழங்கியுள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான போட்டித் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஹர்பஜன்சிங் இதில் பங்கேற்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என இந்திய கிரிக்கெட் சபை கேட்டுள்ளது. தூஸ்ரா வகைப் பந்து வீச்சு ஒப்-ஸ்பின்னர்களுக்கு வலுவான ஆயுதமாக விளங்கி வருகின்றது.



## சிந்தனைக்கு

சமூக மாற்றத்திற்கு முதற் படியாக சமூக விழிப்புணர்வு அவசியம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 29-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## இதுவரை இல்லை....!

"விடுதலைப்புலிகளுக்கும்– சிறிலங்கா அரசாங்கத்திற்குமிடையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில், இதுவரையில் இணக்கப்பாடு எதுவும் ஏற்படவில்லை" என்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கூற்றுக்கள் நியாயத்தின் பாற்பட்டதே.

ஆனால் விடுதலைப்புலிகளுக்கும்–சிறிலங்கா அரசிற்கும் இடையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றமையும் உண்மையே. ஆனால் இவ்விடயத்தில் எந்தளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தையில் இருதரப்பிற்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுமா? என்பது குறித்து பலமட்டத்திலும் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

அரசாங்கத் தரப்பும்–விடுதலைப்புலிகளும் இவ்விடயம் தொடர்பாகச் சாதித்து வரும் மௌனமானது பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்பட்டு வருவதாக ஒரு தரப்பில் அர்த்தப்படுத்தப்படுகின்றது. அதாவது "மௌனம" முன்னேற்றத்திற்கு அறிகுறி அன்றி இருதரப்பினர் மீதும் உள்ள சர்வதேசத்தின் பார்வை, அழுத்தம் என'பன இத்தகைய அர்த்தப்படுத்தலுக்குக் காரணமாக இருக்கலாம்.

விடுதலைப்புலிகளும், சிறிலங்கா அரசாங்கமும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விடயத்தில் இணக்கப்பாடு ஒன்றிற்கு வரவேண்டும் என உதவி வழங்கும் நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன என்பது தெரிந்ததொரு விடயமே. ஆனால் உதவி வழங்கும் நாடுகளின் கோரிக்கை, அழுத்தம் என்பனவற்றிற்காக நிதி உதவிகளைப் பங்கீடு செய்யும்வகையில், சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளுடன் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருமா? என்பது கேள்விக்குரியதே.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதென்பது மனிதாபிமான அடிப்படையின் பாற்பட்டது. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் மனிதாபிமான பணி என்பதற்காக இன ரீதியிலான தமது போக்கை மாற்றிக் கொள்ளுமா? என்பது சந்தேகமே. இதனை நாம் வறட்டுத்தனமான வாதமாக, ஆதாரமற்ற ஒன்றாக முன்வைக்கவில்லை.

சுனாமி அனர்த்தத்தினால் இலங்கைத் தீவின் கிழக்கு, தெற்குக் கரையோரங்கள் பாதிக்கப்பட்டபோதும், அரசாங்கம் முதலில் கிழக்குக்கு கரையோரத்தைக் கண்டு கொண்டதாக இல்லை. தெற்கிலேயே பேரனர்த்தம் ஏற்பட்டபோது பிரச்சாரம் செய்தது. ஆனால் உண்மையில் தெற்கைவிட கிழக்குக் கரையோரத்திலேயே பேரழிவு ஏற்பட்டது. சுனாமியில் இறந்தோரின் 2/3 பங்கினர் கிழக்கிலேயே பலியாயினர்.

இதேவேளை நிவாரணப்பணிகளும் தெற்கிலேயே முடுக்கி விடப்பட்டன. உள்நாட்டு, வெளிநாட்டு மீட்புப் பணியாளர்களும் பெருமளவில் தெற்கிற்கே அனுப்பப்பட்டனர். வெளிநாட்டு நிவாரணப்பொருட்களும், தெற்கிற்கே அதிகளவில் சென்று சேர்ந்தன. அதிலும் குறிப்பாக முல்லைத்தீவு போன்ற விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு நிவாரணப்பொருட்கள் அனுப்புவதற்கு அரசாங்கம் காலஅவகாசம் எடுத்துக்கொண்டதோடு புனர்நிர்மாணப் பணிகளை முடுக்கிவிடத்தக்க உதவிகளை வழங்கவில்லை.

எடுத்துக்காட்டாக காலி போன்ற நகரங்களில் புனர்நிர்மாணப் பணிகளைத் தொடங்கியுள்ள அரசாங்கம் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைப்பதற்கான இடைத்தங்கல் முகாம்களைக் கூட அமைக்க வழிசெய்யவில்லை. மக்கள் தொடர்ந்தும் பாடசாலைகளிலேயே தங்கியிருக்க வேண்டியதாகியுள்ளது.

இத்தகையதொரு வேறுபட்ட / முரண்பாடான நிலை காணப்படுகையில் அரசாங்கத்திற்கும்–விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறதென நம்பிக்கை கொள்வது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாக ஆகிவிடக் கூடாது. ஏனெனில் அதற்கான வாய்ப்புக்களும் நிறையவே உண்டு.

எடுத்துக்காட்டாக ஜே.வி.பி போன்ற அரசாங்கத்தின் பங்காளிகள் வழமை போலவே சுனாமி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விடயத்திலும், அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை எதிர்த்தே வருகிறது. இந்நிலையில் அரசாங்கத்துடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணப்பட்டாலும் /உடன்பாடு ஏற்பட்டாலும் அது அமுலாக்கப்படுமா? அரசாங்கத்தால் அமுலாக்கம் செய்யமுடியுமா? என்பதும் கேள்விக்குரியதே. ஏனெனில் ஜே.வி.பி செய்யும் அனைத்து அடாவடித் தனங்களையும், அவமானங்களையும் சனாதிபதி சந்திரிகாவும், அவரது சகாக்களும் பொறுத்திருப்பது ஆட்சிஅதிகாரத்தைத் தக்க வைப்பதற்காகவே ஒழிய பண்பட்ட அரசியலின் பாற்பட்டதல்ல.

# யாழ்.தீவகக் கடற்பரப்பில் மீண்டும் இந்திய மீனவர் அத்து மீறி மீன் பிடி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகக் கடற்பரப்பில் மீண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து கடற்றொழில்களில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி கடற்பரப்புக்களில் நீண்ட காலமாக இல்லாதிருந்த இந்திய மீனவர்களின் அத்து மீறல் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளமை குறித்து தீவக கடற்றொழிலாளர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்டிருக்கும் யாழ்.குடாநாட்டுக் கடற்றொழில் வளங்களை மேலும் சீரழிக்கும் விதத்தில் இந்திய மீனவர்கள் கனரக இழுவைப் படகுகள் சகிதம் குடாநாட்டுக் கடற்பரப்பில் அத்துமீறி தொழில் செய்ய முனைகின்றமை மனிதாபிமான மற்ற செயல் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் பலரும் தமது ஆட்சேபங்களைத் தெரிவித்துள்ளனா (33)

# சுனாமி அனர்த்தம் தொடர்பான சுயாதீன விசாரணைக்குழு அமைக்குக

### ஆளும் கட்சி பா.உ கோரிக்கை

சுனாமி அனர்த்தம் தொடர்பில் சுயாதீன விசாரணைக் குழு ஒன்றை அமைக்குமாறு சனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் சனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷ இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட எச்சரிக்கை உரிய முறையில் பொது மக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை என்று எழுந்துள்ள குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

சுனாமித் தாக்கம் குறித்து இலங்கைக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் உரிய முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என சுனாமி எச்சரிக்கை மைய தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகிய போதிலும் அவ்வாறான எச்சரிக்கை சமிக்ஞைகள் தமக்குக் கிடைக்கவில்லை என இலங்கை அரசாங்கம் தெரி வித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

# எஸ்.பி.திஸாநாயக்கவை விடுவிக்கும் முகமாக ஐ.தே.கவின் போராட்டம் 31 ஆம் திகதி ஆரம்பம்

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவை விடுவிக்கும் முகமாக மீண்டும் போராட்டங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாகும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் இந்தத் தகவலை வெளியிட்டார். எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கடூழிய சிறைத்தண்டனை தொடர்பில் ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நாட்டின் உயர் நீதிமன்றமானாலும் அது அரசியலமைப்பில் கூறப்பட்டபடியான தண்டனையையே குற்றம் காணப்பட்டவருக்கு வழங்க முடியும் எனக்குறிப்பிட்ட அவர் எஸ்.பி திஸாநாயக்கவுக்கு நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக சாதாரண தண்டனையையே இலங்கையின் அரசியல் அமைப்பின்படி வழங்க முடியும் என சுட்டிக்காட்டினார்.எனினும் உயர் நீதிமன்றம் சனநாயகத்துக்கு எதிரான வகையில் இந்தத் தீர்ப்பில் நடந்து கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த மாநாட்டில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜயசேகர சனாதிபதியே சிந்தித்து எஸ். பி திஸாநாயக்கவுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக கொண்டார். பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தமது கருத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச ரீதியில் அரசியல் கைதிகளாக இருந்த இருவர் அரசியல் கைதியான எஸ்பி திஸாநாயக்கவை விடுவிக்கும் முகமாக ஒழுங்கு செய்யப் பட்டுள்ள நிகழ்வில் உரையாற்றுவர் என தெரிவித்தார். (32)

# எதிர்க் கட்சித் தலைவர் ரணில் இன்று நோர்வே பயணம்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று நோர்வே நாட்டுக்கு விஜயம் செய்கிறார். அங்கு அவர் அந்த நாட்டின் பிரதமர் பொன்டவிக்கைச் சந்தித்து பேச்சுநடத்தவுள்ளார். இதன் போது சுனாமியின் பின்னர் நாட்டின் அபிவிருத்தி குறித்தும் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் அவர் விரிவாகக் கலந்துரையாடுவார் என தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனையடுத்து ரணில் விக்கிரமசிங்க ஜெனீவாவுக்கும் விஜயம் செய்யவுள்ளார். அங்கு ஏற்கனவே தங்கியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவுடன் இணைந்து அவர் இலங்கையில் அரசாங்கம் தமது கட்சிக்கு எதிராக நடத்திவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறைப்பாடுகளை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னால் சமர்ப்பிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# காலி அரசாங்க அதிபருக்குப் பதிலாக விசேட ஆணையாளர் நியமனம்

காலி மாவட்டத்தின் நிர்வாகம், விசேட ஆணையாளர் ஒருவரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் காலி அரசாங்க அதிபரின் பணிகள் குறிப்பிட்ட ஆணையாளரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. முன்னாள் அரசாங்க அதிபர் ஹேவாவசம் தலைமையில் இந்த ஆணையாளர் சனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.காலி அரசாங்க அதிபரின் செயற்பாடுகள் சுனாமி அனர்த்தத்தின் பின்னரான நிவாரணப்பணிகளில் திருப்தி தரவில்லை என்பதை கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை கிழக்கு மாகாணத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கல்வி நிலை தொடர்பாக சமர்பிக்கப்பட்ட அறிக்கையில் திருப்தி இல்லாமையை அடுத்து அங்குள்ள உண்மை நிலையை அறிந்து கொள்ள அரசாங்கம் விசேட குழு ஒன்றை அங்கு அனுப்பவுள்ளது. (32)

# வீதிப் போக்குவரத்து தொடர்பாக காவல் துறையால் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினரால் வீதி விபத்துக்களை தடுக்கும் முன்னோடி நடவடிக்கையாக கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன. நேற்றுக் காலை 10.00 மணி தொடக்கம் 11.30 மணி வரையும் முறிகண்டியில் அமைந்துள்ள டிப்பர் மற்றம் பார ஊர்திப் பேணுகைப் பகுதியிலும் 2.00 மணி தொடக்கம் 3.30 மணி வரை பாண்டியன் பாரஊர்த்திப் பேணுகைப் பகுதியிலும் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் காவல் துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவு பிரதம பரிசோதகர் இ.கனலிங்கம் அவர்களாலும் பரிசோதகர் அ.விஜயகுமார்,தலைமைக்காவலர் நஜீவானந்தன் அவர்களாலும் வீதி ஒழுங்கு தொடர்பான கருத்துக்கள் வழங்கப்பட்டது. அத்துடன் ஏ-9 நெடுஞ்சாலையையும் அதனை அண்டிய பகுதிக ளிலும் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் தொடர்பான புகைப் படங்களும் காண்பிக்கப்பட்டது. இக் கலந்துரையாடலில் டிப்பர் மற்றும் பாரஊர்திப் பேணுகைப் பகுதியில் சாரதிகள், நடத்துநர்கள் என 33 பேரும், பாண்டியன் ஊர்திப் பேணுகைப் பகுதியில் 21 பேரும் கலந்து கொண்டனர். (சோ)

## மன்னாரில் நடைபெற்ற பேரணியில்...








# தென்கொரிய உயர் குழு யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)
தென் கொரியாவின் குடிவரவு, குடியகல்வு மற்றும் தூதுவரால யங்கள் விவகார அமைச்சர் அன்ஸ் கில்யொங் மற்றும் தென்கொரிய தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர், பணிப்பாளர் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய் துள்ளனர்.

சுனாமி ஆழிப் பேரலையின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டை மீளக் கட்டியெழுப் புவதில் தென்கொரியாவால் வழங்கப்படவுள்ள உதவிகள் குறித்து ஆராய்வதற்கான முன் னோடி விஜயமாக யாழ்.வந்த இருவர் சுனாமியால் பாதிக்கப் பட்ட வடமராட்சி பிரதேசங்களை யும், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கி யுள்ள நலன்புரி நிலையங்களை யும் நேரில் சென்று பார்வையிட்ட இக் குழுவினர் எதிர்கால அபி விருத்தித் திட்டங்களில் தென் கொரியா வழங்க உள்ள தொழில் நுட்ப உதவிகள் குறித்து யாழ். அரச அதிபர் கணேஷ் மற்றும் அதி காரிகளைச் சந்தித்துக் கலந்துரை யாடியதுடன் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த வரவேற்பு நிகழ்விலும் இவர் கலந்து கொண்டனர்.(33,27)

## 1000 அமே.படையினர் நாடு திரும்பவுள்ளதாக தகவல்

இலங்கையில் தங்கியுள்ள அமெரிக்க படையின் ஒரு தொகுதியினர் அமெரிக்கா திரும்பவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க படைகளின் அதிகாரி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். இலங்கையில் தங்கியுள்ள அமெரிக்க படைகள் குறித்த உரிய மதிப் பீடுகள் வெளியாகாத நிலையில் 1000 படையினர் நாடு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (32)

### உலங்கு....

பரப்பில் நின்றவாறு மத்தாப்பூ, சீறுவாணம், பட்டாசு ஆகியவற் றைக் கொளுத்தி வீசி வாண வேடிக்கை விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்.இதனைக் கண்ட அப் பகுதி மக்கள் மீண்டும் சுனாமி அலை தாக்கப் போவதனை அறி விக்கும் முகமாகவே படையினர் இச்சமிக்ஞைகளை தமக்குக் காட்டு வதாக எண்ணிப் பீதியடைந்து ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தனர்.

சுனாமி மீண்டும் தாக்கலாம் என்ற அச்சத்தில் கலங்கி நிற் கும் மக்களை மேலும் மிரட்டும் விதமாகப்படையினர் நேற்று மேற் கொண்ட இவ் விஷம விளையாட் டுக் குறித்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கசமாச செயலர் க.சூரியகுமார் விசனம் தெரிவித்துள்ளார். (33)

### வீரவணக்கம்....

திருகோணமலை.) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின் றனர்.

### அரசாங்கம்...

மேற்கொள்ளலாம்.

சுனாமி அனர்த்தத்தால் தமிழ் மக்களின் விடுதலைப் போராட் டமோ அவர்களது இனப்பிரச் சினையோ அடித்துச் செல்லப்பட வில்லை. அது இன்னமும் தீர்க்கப் படாத ஒரு பிரச்சினையாகவே தொடர்ந்து இருந்து கொண்டிருக் கின்றது.

ஆனால் நாங்கள் இப்பொழுது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்க ளது புனர்நிர்மாணப் பிரச்சினைக் குத்தான் முதலிடம் கொடுத்துள் ளோம். அரசாங்கத்துடனும் ஒத்து ழைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். வேற்றுமைகளை மறந்து, பிரிவினைகளை மறந்து நாங்கள் அரசாங்கத்துடன் பேசி ஒரு பொதுவான வேலைத்திட் டத்தை உருவாக்கி வெளிநாடுகளி லிருந்து வருகின்ற நிதியுதவிகளை சமத்துவமாகப் பகிர்ந்தளித்து மக்க ளின் உடனடித்தேவைகளையும் அவா களின் புனர்வாழ்வு புனர்நிர்மாண தேவைகளையும் பூர்த்தி செய்வதற் குதான் இப்போது முயற்சித்துக் கொ்ண்டிருக் கின்றோம்.

அரசியலைப் பொறுத்தவரை யில் சுனாமி அனர்த்தத்தை ஒரு சாட்டாக வைத்து அரசாங்கம் தமிழ மக்கள் மத்தியில் ஒரு நல்லெண் ணத்தையும், நம்பிக்கையையும், உருவாக்குவதற்கான சில முயற்சி களைச் செய்யலாம்.அது செய்யப் படவில்லை என்று தான் நாம் கரு துகின்றோம்.உதாரணமாக ஐ.நா. பொது செயலாளர் இங்கு வந்து தமிழ் மக்களைப் பார்க்க விருப்பம் தெரிவித்த போதும் அதற்குத் தடையாக நின்று அவரை இங்கு வராமல் செய்தது பெரியதொரு வரலாற்றுத் தவறு. இது மக்கள் மத்தியிலுள்ள நம்பிக்கையை உடைத்துள்ளது. அதாவது இன்ன மும் தமிழ் மக்களது பிரச்சி னையை இன ரீதியாகத்தான் அர சாங்கம் பார்க்கின்றது என்ற சந்தே கம் மக்கள் மத்தியில் எழுந்துள் ளது. ஆகவே மேற்கொண்டு இப்ப டியான கைங்கரியங்களில் இறங் காமல் உலக நாடுகளில் இருந்து வரும் தலைவர்களைப் பாதிக்கப் பட்ட தமிழர் தேசத்திற்கு அனுப்பி வைத்து விடுதலைப்புலிகளது தலைவர்களுடன் கலந்துரையாட அனுமதித்து எங்கள் மக்களுடைய பிரச்சினையை சர்வதேச அரங் கிற்குக் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் தடைபோடக்கூடாது. அது பேச்சுவார்த்தையையும் பாதிக்கும், பரஸ்பர நம்பிக்கையை யும் பாதிக்கும் எதிர்காலத்தில் இப் பிரச்சினைக்கான சமாதான முயற்சி களையும் பாதிக்கும்.

ஆகவே இந்தச் சூழ்நிலையை அரசாங்கம் நல்ல முறையில் பாவித்து எமது மக்களுக்கு ஓர் நல்லெண்ணத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் எற்படுத்துவதற் கான ஒரு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென்றுதான் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத்தெரிவிக்கையில் ;

சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து இலங்கைக்கு கிடைக்கின்ற வெளி நாட்டு உதவிகளை பகிர்ந்தளிப் பதில் அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் நியாயமாக செயற் படுமானால் நெருக்கடியைச் சந்தித் துள்ள சமாதான முயற்சியைக் கூட மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமையும். இலங்கையில் குறிப்பாக மிக மோச மாகப் பாதிக்கப்பட்டது வட-கிழக்கு இணைந்த தமிழர் தாயகப் பகுதி தான். இலங்கையில் குவிந்துள்ள சர்வதேச உதவிகளை சரியாகப் பகிர்ந்தளித்து இம் மக்களுக்கு சரியான முறையில் கொண்டு வருவ தற்கான, சென்றடை[illegible]தற்கான ஏற்பாடுகளை சரியா[illegible] முறையில் செய்வோமாக இரு[illegible]ால் நிச்சய மாக இழந்துபோன [illegible]க்கைகளை மீண்டும் கட்டியெ[illegible]ப்புவதற்கு நல்லதோர் சந்தர்ப்பம் கிட்டும்.

இந்நிலையில் அரசு இதில் கரி சனை கொள்ளாது இருப்பது எமக்கு ஒரு பெரிய கவலையளிக்கி றது. 20 வருடங்களாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அழிவைச்சந்தித்த மக்கள் மீண்டும் ஒரு அழிவைச் சந்தித்துள்ளனர். இந்நிலையில் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கின்ற உடனடி நிவாரண புனர்வாழ்வுப் பணிகள் மறுவாழ்வு பணிகளுக்கு இலங்கை அரசு உதவுமேயானால் நிச்சயமாக இழந்த இந்த மக்களு டைய நம்பிக்கைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம். இச்சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் எங்கள் எல்லோரு டைய எதிர்பார்ப்பும், சர்வதேச சமூ கத்தினுடைய எதிர்பார்ப்புமாகும். இதேவேளை சுனாமியால் வட- கிழக்கு பாதிக்கப்பட்ட பகுதிகளில் அப்பாதிப்பிலிருந்து மீட்டெடுத்து செயற்றிட்டங்களை மேற்கொண் டுள்ளோம். இவ் வேலைத்திட்டங் களை வெற்றிகரமாக மேற் கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கலை பண்பாட்டுக் கழகத்தின் "வெளிச்சம்" வெளி வந்து விட்டது

விடுதலைப்புலிகள் கலை, பண் பாட்டுக்கழகத்தின் கலை, இலக் கிய, சமூக இதழான வெளிச்சத் தின் எண்பத்தியொன்பதாவது இதழ் வெளிவந்துவிட்டது.

இந்த இதழில் தமிழீழத் தேசி யத் தலைவரின் மாவீரர் தின உரையின் ஒரு பகுதியுடன் மாலிகா, புதுவை இரத்தினதுரை, கை.சரவ ணன், செல்வா ஆகியோரின் கவி தைகளும், முல்லை யேசுதாசன், க.சட்டநாதன், மு.அநாதரட்சகன், செ.யோகநாதன் ஆகியோரின் சிறு கதைகளும் இடம் பெற்றுள்ளன.

அத்துடன் மயிலங்கூடல் பி.நட ராஜன், மனோன்மணி சண்முக தாஸ் ஆகியோரின் கட்டுரைக ளும், செங்கை ஆழியான், ஞான ரதன் ஆகியோரின் தொடர் கட் டுரைகளும், யோ.சத்யன், ஈ.கும ரன் ஆகியோரின் நூல் மதிப்பீட்டு ரைகளும், மூதறிஞர் சொக்கன், கவிஞர் தில்லைசிவன் , எழுத்தா ளர் கே.வி நடராஜன் ஆகியோ ருக்கான அஞ்சலியுடன் குறிப்புக் கள் இன்னும் பலவும் இடம் பெற்றிருக்கின்றன.

## முல்லை.நகரத்திட்டமிடல் நெறிப்படுத்தல் குழு கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்ட நகரத் திட்டமிடல் நெறிப்படுத்தல் குழுக் கலந்துரையாடல் தமிழீழ கடற் படைத்தளபதி கேணல் சூசை அவர்களின் தலைமையில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது. முதலில் சென்ற கூட்ட அறிக்கை யினை ரெக்நிறுவனப் பணிப்பாளர் திலக் வாசித்தார். தொடர்ந்து சென்ற கூட்டத்தில் எடுத்த தீர்மானம் நிறை வேற்றப்படாதவை தொடர்பாக ஆராயப்பட்டது. அத்துடன் ஜி.ரி. இசற் நிறுவனத் பிரதிநிதிகளும் வருகை தந்தனர். மீனவர்கள் தமக்குத் துறைமுகம் அமைத்து தரும்படி ஜி.ரி. இசற் நிறுவனத் தினரிடம் கோரிக்கை விடுத்தனர். இதன் முக்கியத்துவம் தொடர்பான முழு விளக்கத்தினை யும் தமிழீழ கடற்படைத் தளபதி கேணல் சூசை அவர்கள் வழங்கினார். (20)

### சுனாமி....

யிலும், வடமராட்சி கிழக்கி லும் ஏனைய கரையோரப் பகுதி களிலும நேற்றுக்காலை இவ்வாறு கிடைத்த தகவலையடுத்து மக்கள் வெளியேறியதுடன் பாடசாலைகள் மூடப்பட்டன. எனினும் பின்னர் இத் தகவல் தவறானதென அறிவிக்கப் பட்டதையடுத்து 12 மணியளவில் பதற்ற நிலையை தணித்ததுடன் மக்கள் மீளத் திரும்பத் தொடங் கினர்.

### இரத்த....

காணப்படுவதனாலேயே இத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் சேவை மனம் படைத்தோர் இரத்த தானம் வழங்குமாறும் வைத்தியசா லை நிர்வாகத்தால் கோரப்பட்டுள் ளது. இதனையடுத்து யாழ். உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாண வர்கள் 20 பேர் தமது கல்லூரியில் வைத்து இரத்த தானம் செய்துள் ளனர். (33)

### சிறுவர்களை....

வருவதாகவும் அவர்களை பராமரிப்பதற்கான ஏற்பாடுகளைப் விடுதலைப்புலிகள் முன்னெடுத் திருப்பதாகவும், குறிப்பிட்ட அவர்கள் இந்த விடயத்தை திரிபு படுத்தித் தம்மீது களங்கம் கற்பிக்க சிலர் முற்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

### இராணுவ....

உட்பட ஏனைய திணைக்களத் தலைவர்களும் தலைமை தாங்கினர். மக்கள் தேசியக் கொடியையும், புலிச்சின்னங்களையும், பதாகைகளையும் ஏந்தியவண்ணம் அரசுக்கெதிராகவும் இராணுவத்திற்கெதிராகவும் கோஷங்களை எழுப்பி ஊர்வலத்தில் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டனர். இவ் ஊர்வலமானது காலை 11.00 மணியளவில் வைத்தியசாலை சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதிவழியே நகர்ந்து கச்சேரியைச் சென்றடைந்ததைத் தொடர்ந்து தமிழ் மாணவ ஒன்றியத் தலைவரினால் மகஜர் வாசிக்கப்பட்டு மக்கள் சார்பாக இரத்தக் கையொப்பமிடப்பட்டு மன்னார் அரச அதிபர் வே.விஸ்வலிங்கத்திடம் வெகுஜன அமைப்பு ஒன்றிய பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப் பினர்களின் உரைகளும் இடம்பெற்றன.

இம்மகஜரில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் தொழிற்சங்கங்களின் இணையத்தலைவர் மகளிர் சங்கத்தலைவர் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

வழமைக்கு மாறாக நகரில் இராணுவமும் பொலிசாரும் குவிக்கப்பட்டிருந்தளபோதும் மக்களின் எழுச்சியைக் கண்டு பீதியில் அவர்கள் ஒதுங்கி நின்றமை குறிப்பித்தக்கது. இனிமேல் எமது நிகழ்வுகளில் தேசியக்கொடி கட்டாயம் ஏற்றப்படும் அதை யாரும் தடுக்க முடியாது என மக்கள் உணர்ச்சி பொங்க உரக்கக் கூறினர். பேரணி மிகவும் உணர்வு பூர்வமாகவும் எழுச்சியாகவும் நடாத்தப்பட்டது. (18)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது